Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

றெனி
பல், மூக்குக் கண்ணாடியகம்
- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்து கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
கண்டி வீதி, சாவகச்சேரி. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, பருத்தித்துறை.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 றஜப் 09 (26.08.2004) வியாழக்கிழமை இதழ்:328

# புலிகள் ஆயுதங்கள் கொண்டுவருவதை போர்நிறுத்த உடன்பாடு தடுக்கவில்லை!

## அரசதரப்பின் குற்றச்சாட்டை தமிழ்ச்செல்வன் நிராகரிப்பு

(கிளிநொச்சி)

**விடுதலைப் புலிகள் ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதோ, ஆயுத ரீதியாகத் தம்மைப் பலப்படுத்துவதோ யுத்தநிறுத்த உடன்பாட்டில் தடுக்கப்பட்ட ஒரு விடயமல்ல.**

**முப்படைகளும் தம்மைப் பலப்படுத்திக்கொண்டிருக்கும் நிலையில் புலிகள் ஆயுதங்களைக் கொண்டுவருவதும் பலப்படுத்துவதும் யுத்த நிறுத்த மீறல் அல்ல. இதை யுத்தநிறுத்த மீறலாக அரசு குற்றம் சாட்டுவது அர்த்தமற்றதொன்று என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**





கிளிநொச்சியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் புறூவ் ஹொவ்டேயைச் சந்தித்த பின்னர் கருத்துவெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில் -

கண்காணிப்புக்குழுத் தலைவருடனான சந்திப்பில யுத்தநிறுத்த நடைமுறைகளை பேணுவது சம்பந்தமாகவும் - தற்போது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி சம்பந்தமாகவும் விரிவாக ஆராய்ந்திருக்கின்றோம்.

இதைவிட எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடுகளை அவருக்கு விளக்கியிருக்கின்றோம்.

எம்மைப் பொறுத்தவரையில் - யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறையில் உள்ளது. ஜனாதிபதியின் கருத்துக்களை வைத்துக்கொண்டு - அதிகாரபூர்வமான கருத்து எது, அதிகாரபூர்வமற்ற கருத்து எது என அறியாமல் கருத்துக்கள் சொல்வது பொருத்தமில்லை. ஆனால் நாளுக்கு நாள் குழப்பமான கருத்துக்கள் வெளியாகின்றன.

எங்களைப் பொறுத்தவரையில் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் என்ற வகையிலும், அனுசரணையாளர்கள் என்ற வகையிலும் அவர்கள் தருகின்ற உத்தரவாதங்களின் அடிப்படையில் யுத்தநிறுத்த உடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்கினால் திருப்பித் தாக்குங்கள்; படையினருக்கு கொட்டேகொட உத்தரவு

(கொழும்பு)

இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் தற்காப்புக்காக பதில் தாக்குதல் நடத்துங்கள் என்று இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட படையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கிழக்கில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவங்களை அடுத்து அவர் விடுத்த உத்தரவிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இராணுவத்தினரின் இரு வாகனங்களை நோக்கி துப்பாக்கிப் (12 ஆம் பக்கம் பார்க்க)

*தெல்லியூர் ஸ்ரீ துர்க்காதேவி இரதோற்சவத்தை முன்னிட்டு - சுன்னாகம் துர்க்கா பொத்தகச் சோலை ஸ்தாபனத்தினர் தயாரித்து வழங்கும் நான்கு வர்ணச் சிறப்புமலர் நாளைய 'நமது ஈழநாடு' இதழில் வெளியாகும்.*



நல்லைக் கந்தன் உற்சவ ஐந்தாம் நாள் திருவீதியுலாக்காட்சி.

## ஆபத்தான கட்டத்தில் சமாதானப் பேச்சுக்கள்! எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் என்றுமில்லாதவாறு இப்போது ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் -

யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் முதல்முதல் தற்போதுதான் பாரிய (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சு கட்டடத்துக்குள் நுழைய டக்ளசுக்கு தடை!

(கொழும்பு)

இந்துசமய விவகார அமைச்சராக உள்ள டக்ளஸ் தேவானந்தா, அவரது அமைச்சு இயங்கும் அதே கட்டடத்தில் அமைந்துள்ள தொழிற்துறை, முதலீடு மற்றும் உல்லாசத்துறை போன்ற அமைச்சுக்கள் அமைந்துள்ள மாடியறைக்குள் செல்லக்கூடாது என்று கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின்படி - காலி வீதியில் அமைந்துள்ள 64 மற்றும் 68 ஆம் இலக்க கட்டடங்களின் 3,4,9 ஆம் மாடிகள் உட்பட அதனுடன் நேரடியாகத் தொடர்புடைய எந்த மாடிகளுக்குள்ளும் செல்லக்கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் புலிகளுடன் முக்கிய பேச்சு!

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புறூவ்ஹொவ்டே நேற்று கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் சந்தித்து அண்மைக் காலத்தில் இடம்பெற்றுவரும் பல்வேறு சம்பவங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டரில் கிளிநொச்சி மைதானத்தில் நேற்றுமுற்பகல் 11 மணியளவில் வந்திறங்கிய கண்காணிப்புக்குழுத் தலைவர் தலைமையிலான குழுவினரை, விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்று சமாதான செயலகத்திற்கு அழைத்துச்சென்றார்.

இதன்பின்னர் தமிழீழ (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு மீதான குற்றச்சாட்டு; அடியோடு மறுக்கிறார் ஹொக்லன்ட்!

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தனது பணியைச் சரிவரச் செய்யாத காரணத்தால், இலங்கை இரண்டாகப் பிளவுபட்டுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்த குற்றச்சாட்டையிட்டு கண்காணிப்புக்குழு விரக்தியடைந்திருப்பதாக, அதன் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஹொக்லன்ட் மேலும் தெரிவித்ததாவது -

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் மேற்படி குற்றச்சாட்டை நாம் முற்றிலுமாக மறுக்கின்றோம். அத்துடன் தவறான குற்றச்சாட்டுக்கள் எம்மீது சுமத்தப்படுவதையிட்டு நாம் விரக்தியும் அடைகின்றோம்.

இலங்கைக்கு நாம் வந்திருப்பது இங்கு ஏற்படும் சகல தகராறுகளையும் தீர்த்துவைக்கும் அதிகாரத்துடன் அல்ல. அரசாங்கத்தினதும், (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR Your friend in the skies...

# தீவக மக்களின் அவசர தேவைக்கு புதிய அம்புலன்ஸ் படகு கையளிப்பு

தீவுப்பகுதி மக்களின் தேவைக்கென யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் உதவியுடன், புதிதாக அமைக கப்பட்ட அம்புலன்ஸ் படகு கையளிப்பு வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்துறையில் வைபவரீதியாக இடம்பெறவுள்ளது.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவன அதிகாரியினால் - இந்த அம்புலன்ஸ் படகு, யாழ்ப்பாண சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளரிடம் தீவக மக்களின் மருத்துவ தேவைக்கென கையளிக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக இன்று பகல் 2.00 மணியளவில் யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள், சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.தெய்வேந்திரம் மற்றும் அதிகாரிகள் குழு - படகினை, ஊர்காவற்துறைக் கடற்பகுதியில் பரீட்சார்த்த நடவடிக்கையில் ஈடுபடுத்தினர்

இதேவேளை, இந்தப்படகு சேவையில் ஈடுபடும் பட்சத்தில் சீரான போக்குவரத்தின்றி பெரும் சிரமங்களுடன் மருத்துவதேவைகளுக்காகப் பயணிக்கும் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு மக்கள் பெரும் நன்மையடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

தீவகங்களில் உள்ள அவசர நோயாளர்கள் தொடர்பாக அந்தந்தத் தீவுகளிலுள்ள கடற்படையினருக்கு அறிவிப்பதன்மூலம், குறிகாட்டுவான் துறைமுகப்பகுதியில் நிறுத்தப்பட்டிருக்கும் படகு உடனடியாக உரிய தீவுகளுக்குச் சென்று நோயாளர்களை ஏற்றிச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த அம்புலன்ஸ் படகில் பணியாற்றவென நெடுந்தீவைச் சேர்ந்த நா.விக்ரோறியப்பன் படகோட்டியாகவும், ஊர்காவற்துறையைச் சேர்ந்த எஸ்.சில்வெஸ்ரர் படகு உதவியாளராகவும், மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிமனையால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(113)

## கெருடாவில் பாடசாலையை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை!

(தென்மராட்சி)

தென்மராட்சி கெருடாவில் பகுதியில் அமைந்துள்ள சரஸ்வதி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் போது முற்றாக அழிக்கப்பட்டு இதுவரை காலமும் மீள இயக்கப்படாமல் உள்ள சரஸ்வதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை, மீண்டும் அதே இடத்தில் இயக்க பல்வேறு தரப்புக்களுக்கும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

பற்றைகளால் சூழப்பட்டுப் புதர் மண்டிக்கிடக்கும் இந்தப் பாடசாலையை மீண்டும் இயக்கி இப்பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்கப்படுத்த வேண்டுமெனவும், தென்மராட்சி கல்வி வலய அலுவலகம் அதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ளவேண்டுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



நல்லூர் ஆலயச் சூழலில் தனியார் நிறுவனம் ஒன்று பொருத்தியுள்ள வீதிக் குறிகாட்டியில் தமிழ் மொழி கொலை செய்யப்பட்டுள்ளது



## 588 குடாநாட்டு பட்டதாரிகளுக்கு இரண்டாம் திகதி நியமனக் கடிதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தெரிவான வேலையற்ற பட்டதாரிகள் 588 பேருக்கு பயிற்சி பெறுவதற்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அடுத்த மாதம் 2 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வு காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 1.00 மணிவரை நடைபெறும்.

ஏற்கனவே, வேறு நிலையங்களில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதும் அங்கு நடைபெறமாட்டாது என்றும், அனைவரையும் வீரசிங்கம் மண்டபத்துக்கு வருமாறு யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவி இயக்குநர் ரி.சிவதட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

## ஓட்டோ மோதலில் வயோதிபப் பெண் காயம்!

(யாழ்ப்பாணம்)

இரவு வேளை வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபப் பெண் ஒருவரை ஓட்டோ மோதியதில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு மந்திகை மடத்தடியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அல்வாயைச் சேர்ந்த கனகம்மா (வயது 69) என்ற மூதாட்டியே தலையிலும் கையிலும் பலத்த காயங்களுடன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

(14)


## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



கொற்றாவத்தை வாரிசீமாவைச் சேர்ந்த
மதீஸ்வரன் ரதீனா
தம்பதிகளின் செல்வப் புதல்வி
டிலுக்ஷனா
தனது முதலாவது
பிறந்தநாளை இன்று
(26.08.2004) தனது இல்லத்தில்
வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அன்ரிமார், அத்தைமார், பெரியம்மாமார், பெரியப்பாமார் லண்டனிலுள்ள மாமிமார், மாமாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் டிலுக்குட்டியை பொலிகண்டி வீரப்பெருமான் அருள்பெற்று வாழ்கவாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

கொற்றாவத்தை
வாரிசீமா. வல்வெட்டித்துறை

தகவல்:
தந்தை மதீஸ்வரன் (ராசி)

**நாகம்ஸ்** சுன்னாகம்

பிரசாந், மீனா, சுஹாசினி நடித்த



ஷாக்

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ரஜனி, சௌந்தர்யா, சிவாஜி, நடித்த
படையப்பா
காட்சிநேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Strike Force
(சி-2723)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று மட்டும்
கமல், சினேகா, நடித்த
வசூல்ராஜா MBBS
முக்கிய அறிவித்தல்
காட்சிநேரம் மாற்றப்பட்டுள்ளது
10.00, 2.00, 6.00, 9.00 (பு.நே)
நாளை முதல் விஜய் நடித்த
மதுர
(சி-2725)

## விற்பனைக்கு

CLT 75 (5 கிலோமீற்றர்)
கோட்லஸ் தொலைபேசி (Tell Phone)
விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு : 021-222 5710

## இலங்கையில் நூல் வியாபாரத்தில் முன்னணி வகிக்கும்

# கோட்ஸ் திரெட் லங்கா

தனது வியாபார சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் யாழ்.மாநகரிலும் முகவர்களை வைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளது

இது குறித்து மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் யாழ்.மாநகரிலுள்ள, யாழ்.மத்திய கல்லூரியில் வணிக மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் வர்த்தகக் கண்காட்சியில், எமது நிறுவனத்தின் பணிமனையுடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

இதில் எமது நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களும் கண்காட்சிக்கு வைக்கப்படும்.

Coats Thread Lanka (PVT) Ltd
P.O Box 250, Colombo.
Level 3 -6
No.163, Union Place,
colombo - 02
T.P. 0112 - 307358

COATS THREAD LANKA

(C/3001)

M.G.M உற்பத்திப் பொருட்களின்
ஏக விநியோகஸ்தர்களான

## முகமது கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ்

இல.777, கே.கே.எஸ். வீதியில் மீண்டும்
தங்களுடைய வியாபாரத்தை ஆரம்பித்து விட்டார்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்

ஆட்டா மா, வறுத்த சிவப்பு அரிசி மா, வறுத்த வெள்ளை அரிசி மா, வெள்ளை அரிசி மா, கடலை மா, குரக்கன் மா, உழுந்து மா, கோதுமை குறுணல்

ரோஸ் ரசம், நண்ணாரி ரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ் புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம்

நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், ஒலிவ்வெண்ணெய்

வினாகிரி, அயடீன் உப்பு, ஐசிங் சீனி, பேக்கிங் பவுடர், அப்பச்சோடா, கொக்கோ பவுடர், சிற்றிக் அசிட்.

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப் படு ஊறுகாய், மோர் மிளகாய்

வெள்ளைப் பிட்டுக் கலவை, சிவப்புப் பிட்டுக் கலவை, திடீர் தோசைக் கலவை, திடீர் அப்பக் கலவை

சீயாக்காய் பவுடர்

பிளீச்சிங் பவுடர்

ஆகியவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
M.G.M. T.P :- 0777 741195
0777 741295

(C/2961)

# கிழக்கு, கொழும்பு கொலைகள் அரசாங்கம் கண்டிக்கிறதாம்!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலும், கொழும்பிலும் நடைபெற்றுவரும் கொலைச் சம்பவங்களை அரசாங்கம் கண்டிப்பதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கையும், கொழும்பையும் மையப்படுத்தி அண்மைக்காலமாக கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அரசியல் காரணங்களை மையப்படுத்தி நடைபெறும் இந்தப் படுகொலைச் சம்பவங்கள் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறான கொலைச் சம்பவங்கள் போர்நிறுத்த உடன்படிக்கையை மீறுவதாக அமைவதோடு, தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை சம்பந்தப்பட்டவர்கள் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (01)

## தேசிய பிக்குகள் முன்னணியின் ஏற்பாட்டில்

# இடைக்கால யோசனையை எதிர்த்து பொரளையில் திங்களன்று பேரணி!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தேசிய பிக்குகள் முன்னணி கடந்த திங்களன்று பொரளையில் கண்டனப்பேரணியை நடத்தியது.

பொரளைச் சந்தியில் ஆரம்பமான எதிர்ப்புப்பேரணி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தைச் சென்றடைந்தது.

அங்கு விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனையின் அடிப்படையில், அரசாங்கம் பேச்சுக்களை நடத்தக்கூடாதென்ற கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பியதுடன், கண்டனக் கூட்டமும் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள்தாக தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது. (01)

# அமெரிக்கத் தூதுவருடன் ஹெல உறுமய சந்திப்பு!

ஜாதிக ஹெல உறுமயவுக்கும், அமெரிக்கத் தூதுவருக்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தில் பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் பொருட்டு ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மெத்தானந்த தேரர், உடுவே தம்மலோக தேரர் ஆகியோர் ஹெல உறுமயவின் சார்பில் கலந்துகொண்டனர்.

அமெரிக்காவின் பதில் தூதுவர் ஜேம்ஸ் வைற் இந்தக் கலந்துரையாடலின்போது, ஜாதிக ஹெல உறுமய சமர்ப்பித்துள்ள மதமாற்றத் தடைச்சட்ட மூலம் பற்றி ஹெல உறுமயப் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்தார்.

இந்தச் சட்டத்தின் மூலம் மனித உரிமைமீறல் நிகழுமா எனக் கேட்டபோது, இந்தச் சட்டத்தினால் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அநீதி இடம்பெறாது என ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்தவர்கள் பதில் கூறியுள்ளனர்.

ஒன்றரை மணித்தியாலம்வரை இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஜாதிகஹெல உறுமயவினால், சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதமாற்றச் சட்டம் பற்றித் தூதுவர்களுக்குத் தெரியப்படுத்தும் செயல் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினமே அந்தப் பிரதிநிதிகள பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் தூதுவர்களையும் சந்தித்ததாகவும் தெரியவருகிறது. (தே)

# பேச்சுக்களின் தாமதத்தால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## நாட்டுமக்களுக்கு விளக்க ஐ.தே.க தீர்மானம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தேக்கநிலையில் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை குறித்து, நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதான பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளது.

இதனால் நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமையை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டுமென கட்சியின் அரசியல் பீடம் தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் மாநாடு நடத்தப்பட்டது.

இரத்தினபுரியில் முதலாவது மாநாட்டை இன்று நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (01)

## மன்னார் — முருங்கனில்

# மாணவியை அலுமாரியில் பூட்டிய அதிபரும் ஆசிரியரும் கைதாகினர்!

(மன்னார்)

மாணவி ஒருவரை பாடசாலை வகுப்பறையிலுள்ள அலுமாரியில் வைத்துப் பூட்டியதான குற்றச்சாட்டின் பேரில், மன்னார் மாவட்ட முருங்கன் பிரதேசத்திலுள்ள பாடசாலை அதிபர் ஒருவரும், ஆசிரியர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

முருங்கன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இந்த இரண்டு பேரும் நேற்றுமாலை மன்னார் மாவட்ட நீதிவான் அப்துல்லா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

# போதைவஸ்துப் பாவனைக்காக 50 மில்லியன் ரூபா செலவாகிறது

(கொழும்பு)

இலங்கையில் போதைவஸ்துப் பாவனையில் ஈடுபடுவோர் நாளாந்தம் 50 மில்லியன் ரூபாக்களைச் செலவிடுகிறார்கள் என புள்ளி விபரமொன்று வெளியாகியுள்ளது.

போதைவஸ்துப் பாவனைக்கு எதிரான நடவடிக்கைக் குழு மேற்கொண்ட ஆய்விலிருந்து இது தெரியவந்துள்ளது.

இலங்கையில் ஒரு லட்சம் வரையான மக்கள் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமைப்பட்டிருப்பதாகவும், இவர்களில் 50 வீதமானோர் பிடிக்கப்பட்டுச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில் 48 பேர் சிறைகளில் உயிரிழந்துள்ளனர் என இலங்கை போதைவஸ்துப் பாவனைக்கு எதிரான நடவடிக்கைகள் குழுவின் இயக்குநர் புஞ்சித ஜெயசுந்தர தெரிவித்தார்.

போதைவஸ்துப் பாவனைக்கு உட்பட்டவர்கள் எனக் கைது செய்யப்பட்ட 81 சிறைக்கைதிகள் ஆயுள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். 97 வீதமானோர் ஹரோயின் போதைவஸ்துக்கு அடிமைப்பட்டுள்ளனர். இவர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இவர்கள் தற்போது இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை இங்கு வெளிநாடுகளில் இருந்து வரும் போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் தங்க வைக்கப்படுகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ------ மட்டக்களப்பில் ------

# இராணுவ உயர் அதிகாரிகளை ஜப்பானியத் தூதுவர் சந்திப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜப்பான் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக, அங்கு விஜயம் செய்ததாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகியோ சுட்டா தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த அகியோ சுட்டா, 233 படைப்பிரிவு உயர் அதிகாரிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது படையினர் படுகொலைகளை நிறுத்துவதற்கு முடிந்தளவு ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது 233 ஆவது பிரிகேட் கட்டளைத் தளபதி பிரிகேடியர் பந்துல குணவர்தனவும் கலந்துகொண்டார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் மாவட்ட செயலர் வி. சண்முகத்தை சந்தித்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக கலந்துரையாடினார். இதேவேளை, ஜப்பானியத் தூதுவர் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராசசிங்கத்தையும் சந்தித்து கலந்துரையாடினார்.

அந்தச் சந்திப்பு குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நான் ஜப்பான் நாட்டு அரசாங்கத்துக்கு அறிக்கை ஒன்றைச் சமர்பிக்கவுள்ளேன்.

இதைவிட தற்போது மாவட்டத்தில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பாகவும், தற்போது நடைமுறைப்படுத்தியுள்ள புதிய பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடியுள்ளோம்.

இலங்கையில் பெரும்பான்மையான மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். இதனை நிலைநாட்ட அனைவரும் ஆவன செய்வேண்டும் என மேலும் தெரிவித்தனர்.

# முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நீக்கியது செல்லுபடியாகாதாம்!

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து மூவரை வெளியேற்றியமை செல்லுபடியாகாது என உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

கட்சியின் ஒழுங்கை மீறியவர்கள் எனக்குற்றஞ்சாட்டி, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிசாட் பதியுதீன், உவைஸ் பைலா, நசீர் ஏ மஜீத் ஆகிய மூன்று பேரையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினர், கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கியிருந்தனர்.

இதற்கெதிராக மூவரும் தாக்கல் செய்த வழக்கில், மனுதாரர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதற்கான காரணம் உறுதிப்படுத்தப்படவில்லை என்று கூறிய உயர்நீதிமன்றம் மனுதாரர்களுக்கு சார்பாகத் தீர்ப்பளித்தது.

# பேச்சுக்களில் அரசின் நிலைப்பாடு தெளிவுபடுத்தினால் ஐ.தே.க. ஆதரவு

## பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் குறித்து அரசாங்கம் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய பின்னர் அதற்கு உதவுவதற்குத் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் அதன் நிலைப்பாட்டை பிரகடனம் செய்ததும் தேவை ஏற்படின் அதற்கான திருத்தத்தினை எதிர்க்கட்சி தெரிவிக்கும்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக தமது நிலைப்பாட்டை அரசாங்கத்தில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் தெரிவிக்கவில்லை.

யுத்தம் ஒன்றில் இறங்குவதற்கு அரசாங்கம் விருப்பம் கொண்டிராத போதிலும், பல்வேறு தனிப்பட்ட அபிப்பிராயங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆயுதம் ஏந்துவதற்கு வழி அமைக்கக்கூடும்.

இடைக்கால ஒன்றுக்கு அதிகார சபையின் யோசனைகளில் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கருதுகிறது.

இந்த யோசனைகளை அடங்கியுள்ள சகல அம்சங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி அங்கீகரிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

# வெள்ளிவிழா நிகழ்வில் பாலகுமாரன் உரையாற்றுவார்

நோர்வே தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழா நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ளது.

இந்த வெள்ளிவிழா நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வுக்கு தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளரும், தமிழீழ ஆர்வலருமான உதயா தலைமை தாங்கவுள்ளார். இந்த நிகழ்வில் உதயா இசைக்குழுவினரின் பல்சுவை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் பாலகுமாரன் அங்கு உரையாற்றவுள்ள நிலையில், அவரது உரை சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# டீசல் கட்டண உயர்வைத் தொடர்ந்து மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும்

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

டீசலின் விலை அதிகரிக்கப்படுகின்றபோது, மின்சாரக் கட்டணங்களையும் அதிகரிக்க வேண்டும் என மின்வலு எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மின்சார சபையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்- நீர்மின் மற்றும் அனல்மின் நிலையங்களை எதிர்காலத்தில் நாம் அமைக்க வேண்டும். மின் உற்பத்தி நடைமுறைகளை விளங்கிக் கொள்ளாதவர்கள் கொத்மலை மின் உற்பத்தித் திட்டத்தை பிற்போடவேண்டும் என கூறுகின்றனர்.

நாள் ஒன்றுக்கு 18 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது. இது பற்றி எவரும் யோசிக்கவில்லை. உரிய காலத்தில் தகுந்த வேலைகளை ஆரம்பிக்காதுவிட்டால், மின்சாரக் கட்டணத்தையும், எண்ணெய் விலைகளையும் அதிகரிக்க வேண்டிவரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பெண்களுக்கான கம்பு ஊன்றிப் பாய்தல் போட்டியில்

# ரஷ்ய வீராங்கனை யெலீனா புதிய உலகசாதனை படைப்பு!



(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான கம்பு ஊன்றி உயரம் பாய்தல் போட்டியில் ரஷ்ய வீராங்கனை யெலீனா இசின்போவா தங்கப்பதக்கம் பெற்றதோடு புதிய உலகசாதனையையும் படைத்தார்.

அவர் 4.91 மீற்றர் உயரத்தைத் தாண்டினார்.

கடந்த ஜுலை மாதம் அவர் லண்டனில் நடைபெற்ற போட்டியில் 4.90 மீற்றர் உயரம் தாண்டியதே சாதனையாக இருந்தது. தனது சாதனையையே முறியடித்து யெலீனா புதிய உலகசாதனை நிகழ்த்தினார்.

மற்றொரு ரஷ்ய வீராங்கனை சுவெட்லீனா பெனோவா 4.75 மீற்றர் உயரம் தாண்டி வெள்ளிப்பதக்கமும், போலந்தைச் சேர்ந்த அன்னா ரோஜஸ்வா 4.70 மீற்றர் உயரம் தாண்டி வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

## ஒலிம்பிக் கூடைப்பந்தாட்டம்

### ரஷ்ய பெண்கள் அணி அரையிறுதிக்கு தகுதி!

(ஏதென்ஸ்)

பெண்கள் கரப்பந்தாட்டப் போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் ஏதென்ஸில் தொடங்கின. ஒரு ஆட்டத்தில் ரஷ்யா - கொரிய அணிகள் மோதின.

இதில் ரஷ்யா 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

மற்றைய ஆட்டங்களில் சீனா 3-0 என்ற கணக்கில் ஜப்பானையும், கியூபா 3-2 என்ற கணக்கில் இத்தாலியையும் தோற்கடித்தன.

## ஆண்கள் 1,500 மீற்றர் ஓட்டம்

### மொரோக்கோ வீரர் தங்கம் வென்றார்!



(ஏதென்ஸ்)

ஆண்களுக்கான 1,500 மீற்றர் ஓட்டப் போட்டியில் மொராக்கோவுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது. அந்த நாட்டைச் சேர்ந்த ஹிச்சம் எல்குயரவுஜி 3 நிமிடம் 34.18 வினாடியில் ஓட்டத்தூரத்தைக் கடந்து முதலிடத்தைப் பிடித்தார்.

கெனிய நாட்டு வீரர் லசா 3 நிமிடம் 34.30 வினாடியில் கடந்து வெள்ளிப்பதக்கமும் - போர்த்துக்கல் வீரர் ரூயி சில்வா 3 நிமிடம் 34.68 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

## பெண்கள் 100 மீற்றர் ஓட்டம்

### அமெரிக்க வீராங்கனை தங்கப்பதக்கம் வென்றார்!

(ஏதென்ஸ்)

பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டும் ஓடடப்போட்டியில் அமெரிக்க வீராங்கனை ஜோன்னா ஹேரய்ஸ் புதிய ஒலிம்பிக் சாதனை படைத்தார். அவர் 100 மீற்றர் தூரத்தை 12.37 வினாடிகளில் கடந்தார்.

இதற்கு முன்னர் 1988 ஆண்டு சியோலில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பல்கேரியாவைச் சேர்ந்த டான்கோவா 12.38 வினாடிகளில் கடந்ததே சாதனையாக இருந்தது.

உகரைன் வீராங்கனை ஒலினா 12.45 வினாடியில் கடந்து வெள்ளிப்பதக்கமும் -

அமெரிக்க வீராங்கனை மெலிசா மோரிசன் 12.56 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் பதக்கப்பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




## கூடைப்பந்தாட்டப் போட்டியில் காலிறுதிக்கு சீன அணி தகுதி!

ஒலிம்பிக் பெண்கள் கூடைப்பந்தாட்டத்தில் காலிறுதிச் சுற்றுக்கு சீனா முன்னேறியுள்ளது. சீனா 67-66 என்ற புள்ளிகளின் அடிப்படையில் உலகசம்பியன் சேர்பியா மற்றும் மான்டெனக்ரோ அணிகளை அதிர்ச்சித் தோல்வியுறச் செய்தது.

சீன வீரர் யாவோ மிங், அற்புதமாக ஆடி புள்ளிகளைக் குவித்ததுடன் 13 ரீபவுண்டுகளையும் சேகரித்து அணியின் வெற்றிக்கு பெரும் பங்காற்றினார்.

நடைபெறும் காலிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டால் பதக்கப்போட்டியில் சீனா விளையாடும்.

இதுவரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இதுவே சிறந்த முன்னேற்றமாகவும் சீனாவுக்கு அமைந்துள்ளது.

1996 இல் நடைபெற்ற போட்டியில் 8 ஆவது இடத்தைப் பிடித்ததே இதற்கு முன்பு வரையிலான சீன அணியின் அதிகபட்ச முன்னேற்றம்.

சீனாவுடன் 'ஏ' பிரிவில் ஸ்பெயின், ஆர்ஜென்ரீனா, இத்தாலி ஆகிய நாட்டு அணிகள் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

அதேசமயம் 'பி' பிரிவில் லிதுவேனியா, போட்டோரிகோ, கிரீஸ், அமெரிக்கா ஆகிய அணிகள் காலிறுதி வாய்ப்பைப் பெற்றுள்ளன.

## பெண்கள் உதைபந்தாட்டம்:

### அமெரிக்கா -பிறேசில் இறுதிப்போட்டிக்கு தகுதி!

(ஏதென்ஸ்)

ஏதென்ஸில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டிகளில் - பெண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் பங்குபற்ற அமெரிக்க -பிறேஸில் நாட்டு அணிகள் தகுதிபெற்றுள்ளன.

பெண்களுக்கான உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பிறேஸில் - சுவீடன் அணிகள் மோதின. இதில் 1-0 என்ற கோல் கணக்கில் பிறேஸில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் அமெரிக - ஜேர்மனி அணிகள் மோதின.

இதில் 2-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தி அமெரிக்கா இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.






பதக்கங்களை சுவீகரித்துக்கொண்ட மகிழ்வில் வீரர்கள் சிலர்.



போட்டியில் வென்ற வெற்றிக்களிப்பில் வீரர் - வீராங்கனைகள்.

## போதை மருந்து சோதனையில்

# அதிகாரிகளை ஏமாற்ற முனைந்த ஹங்கேரி வீரரின் தங்கம் பறிப்பு!

ஏதெனஸ் ஒலிம்பிக் போட்டியில் ஒவ்வொரு போட்டி முடிந்த பின்னரும் வீரர், வீராங்கனைகளிடம் போதை மருந்து சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை நடந்த தட்டெறிதல் போட்டியில் ஹங்கேரி நாட்டு வீரர் ரொபர்ட் பஜிசெசி 70.93 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கம் பெற்றார்.

போட்டி முடிந்த பின்னர் அவரது சிறுநீரை பரிசோதிக்க முடிவுசெய்யப்பட்டது. அப்போது தனது சிறுநீர் மாதிரியை மாற்றிவைக்க முயன்றதாக அவர் மீது புகார் கூறப்பட்டது.

போதை மருந்து சோதனையில் அவர் தில்லுமுல்லு செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சர்வதேச ஒலிம்பிக் குழு ரொபர்ட்டின் தங்கப்பதக்கத்தை பறித்துள்ளது.

இந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் பறிக்கப்படும் இரண்டாவது நபர் ரொபர்ட் ஆவார். முன்னதாக பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற ரஷ்ய வீராங்கனை இரினா போதை மருந்து உட்கொண்டதால் அவரது தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது.

ரொபர்ட்டின் தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டதால் இரண்டாவது இடத்தைப் பிடித்த லிதுவேனியா வீரர் அலிக்னாவுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. மூன்றாவது இடத்திலிருந்த மற்றொரு ஹங்கேரி வீரர் கோவேகாவுக்கு வெள்ளிப்பதக்கமும், நான்காவது இடத்தைப் பிடித்த எஸ்டோனியா வீரர் அலெக்சாண்டருக்கு வெண்கலப்பதக்கமும் வழங்கப்பட்டன.

இதுவரை 3 ஆயிரம் வீரர், வீராங்கனைகளிடம் போதைமருந்து சோதனை நடத்தப்பட்டுள்ளது. இதில் 2015 பேரது முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.



## ஆண்கள் 3000 மீற்றர் தடைதாண்டல் ஓட்டம்

### பதக்கங்கள் மூன்றையும் கென்ய வீரர்கள் வென்றனர்!

ஆண்களுக்கான 3 ஆயிரம் மீற்றர் தடைதாண்டல் ஓட்டப்போட்டியில் கென்யா ஆதிக்கம் செலுத்தியது. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் கென்ய நாட்டு வீரர்களே பிடித்தனர். இசக்கியேல் கெம்பாய் 8 நிமிடம் 5.81 வினாடியில் கடந்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

பிர்மின் 8 நிமிடம் 6.11 வினாடியில் கடந்து வெள்ளிப்பதக்கமும், கோயச் 8 நிமிடம 6.64 வினாடியில் கடந்து வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

### 400 மீற்றர் ஓட்டத்தில் பகாமஸ் வீரருக்கு தங்கம்!

400 மீற்றர் ஓட்டத்தில் பகாமஸ் நாட்டுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது. அந்த நாட்டைச் சேர்ந்த வில்லியம்ஸ் டார்லிங் 49.41 வினாடியில் ஓட்டத்தூரத்தைக் கடந்து முதல் இடதைப் பெற்றார்.

மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்த அனாகுவேரா 49.56 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், ரஷ்யாவைச் சேர்ந்த நதாலியா 49.89 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

# விடுதலைப் பயணத்தை திசைதிருப்ப எத்தனிக்கும் சக்திக்கு இடம் கொடாதீர்!

## சர்வமதக் கலந்துரையாடலில் வேண்டுகோள்

பிளவுகளை ஏற்படுத்தி, விடுதலைப் பயணத்தை திசைதிருப்ப எத்தனிக்கும் எந்த சக்திக்கும் இடம்கொடாது அனைவரும் தத்தமது மதத்தில் உறுதியான பற்றுக் கொண்டு ஒற்றுமையைக் காத்துப்பேணவேண்டுமென்று-

மதமாற்ற தடைச்சட்ட சட்டமசோதா தொடர்பாக சமாதான, மனித உரிமை பண்பாட்டு பணியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வமதக் கலந்துரையாடலின் பின்னா வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கை அரசாங்கம் அமுல்செய்ய முனையும் மதமாற்ற தடைச்சட்டம், வடபகுதி மக்களாகிய எம்மைப் பொறுத்தவரை வேண்டாத விடயமாகும். தமிழ்மக்களிடையேயும், மதத் தலைவர்களிடையேயும், காலங்காலமாக ஒற்றுமையும், புரிந்துணர்வும் நிலைத்து வந்துள்ளது. குறிப்பாக வன்முறையின் அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்க வேண்டியிருந்த காலப்பகுதியில் நாம் ஒன்றித்து செயற்படடமை யாவரும் அறிந்ததே.

ஆயினும் மிக அண்மைக் காலத்தில் மதமாற்றம் தொடர்பாக மனதைப் புண்படுத்தும் சில சம்பவங்கள் இடம்பெற்று வருவதுடன், இவை எமது ஒற்றுமையைப் பிளவுபடுத்துவதாயும் உள்ளன.

இந்த நிலையில், பிளவுகளை ஏற்படுத்தி விடுதலைப் பயணத்தைத் திசைதிருப்ப எத்தனிக்கும் எந்த சக்திக்கும் இடம்கொடாது, அனைவரும் தத்தம் மதத்தில் உறுதியான பற்றுக்கொண்டு ஒற்றுமையைக் காத்துப்பேண வேண்டும் என அனைத்துத் தமிழ்மக்களையும் வேண்டி நிற்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வீதியில் கூடும் இளைஞர்கள் மாணவிகள் மீது சேஷ்டை

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியின் மருங்கில் கூடும் இளைஞர்கள் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்றுவரும் மாணவிகள் மீதும், வயோதிபர்கள் மீதும் சேஷ்டைகள் புரிவது அதிகரித்து காணப்படுகின்றது.

இந்த வீதியில் சட்டவிரோத ஆட்டோத்தரிப்பிடம் உள்ளதால் காலையில் வரும் இளைஞர்கள் மாலைவரை வீதியில் நின்று இளம் பெண்கள் வருவதைக் கண்டவுடன் திடீரென ஆட்டோவை விட்டு வீதிக்கு வந்து குறுக்கேபோய் பயமுறுத்துவது, மது போதையில் மோட்டார் வண்டியை வேகமாக ஓட்டிச் சாகசம் புரிவது, பின்னால்சென்று சேஷ்டை புரிவது போன்ற தொடர் நடவடிக்கையால் மாணவிகள் அச்சத்துடன் பயணம் மேற்கொள்ளவேண்டியுள்ளது

இந்த வீதி போக்குவரத்து நடமாட்டம் கூடிய வீதியாகையால் இவ்வாறான செயல்களால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக வீதி பாவனையாளர்களும், கடை வியாபாரிகளும் விசனம் தெரிவித்தனர். (63)

### தீவகத்தில் அபிவிருத்தித் திட்டங்கள்

உலக உணவுத் திட்டத்தின் மூலம் தீவகத்தின் பின்தங்கிய பிரதேசங்களை இனங்கண்டு, அவற்றுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்தத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி ஊர்காவற்றுறைப் பகுதியில் சேதமடைந்து காணப்படும் பல வீதிகளும் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.(99)

# இழுவைப் படகைப் பயன்படுத்துவதால் மீன் இனங்கள் அழிவடையும் ஆபத்து

வட கடற்பரப்பில் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபடுவதனால், எமது கடலின் அடியிலுள்ள கடற் தாவரங்கள், கடற்பாறைகள், கடல் வாழ் உயிரினங்கள், முருகைக் கற்கள் முற்றாக அழிக்கப்படுகின்றன. இதன் மூலம் கடலின் அடி வனாந்திரமாக மாறிவருவதனால் மீன் உற்பத்தி முழுமையாகப் பாதிக்கப்பட்டு கடலில் மீனினம் குறையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக யாழ். மாவட்டக் கடற்றொழிலாளிகள் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனப் பிரதிகள், மாவட்ட சமாசங்களின் பிரதிநிதிகள் சங்கங்களின் பிரதிகள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் 2005.01.01 ஆம் திகதி தொடக்கம் இழுவைப் படகுத் தொழிலை முற்றாகத் தடைசெய்வதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதனால் குருநகர் அபிவிருத்திச் சங்கத்தை சேர்ந்த 86 இழுவைப் படகுகள் தொழில் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்படும் படகுகள் மாற்றுத் தொழில் செய்வதற்கு உதவியாக ஒரு படகுக்கு 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா வீதம் அறுபது படகுகளுக்கு வனிச்சல்வலைத் தொழிலில் ஈடுபடுவதற்குரிய வலைகள், அதனுடன் இணைந்த கடற்றொழில் உபகரணங்களை அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் பெற்றுத்தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி குருநகர் அபிவிருத்திச் சங்கம், யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (21)

# பட்டதாரிகளுக்கு உரிய துறைகள் பயிற்சியின்போது தீர்மானிக்கப்படும்

வேலையற்ற பட்டதாரிகளை பொருத்தமான அரசதுறைகளில் வேலைக்கு இணைத்துக் கொள்வதற்கு-முதற்கட்டமாக நியமனங்கள் வழங்கப்பட்டவர்களுக்கு பயிற்சிகளின்போதே வேலைக்கான உரிய துறைகள் தீர்மானிக்கப்படவுள்ளது.

முற்கடடமாக, தேர்வு செய்யப்பட்ட 17,023 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் கிடைக்கப்பெறறுள்ளன. இவர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேசமயம், முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளில் 10 ஆயிரம் பேர் ஆசிரியர் சேவையிலும் 1137 பட்தாரிகளுக்கு விவசாய ஆராய்ச்சித்துறையிலும், 700 பேர் சுகாதார அமைச்சிலும், 621 பேர் மகளிர் அபிவிருத்தி மற்றும் சமூக சேவைகள் அமைச்சிலும், 574 பேருக்கு பொது நிர்வாக அமைச்சிலும், 642 பேருக்கு போக்குவரத்து அமைச்சிலும் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் 465 பேருக்கு பொதுச் சேவைகள் பாதுகாப்பு அமைசசிலும், 603 பேருக்கு புத்தசாசன அமைச்சிலும், 372 பேருக்கு விஞ்ஞான தொழிலநுட்ப அமைச்சிலும், 500 பேருக்கு மூலிகை மருத்துவ அமைச்சிலும், 351 பேருக்கு கலாசார அலுவல்கள் அமைச்சிலும், 145 பேருக்கு எரிபொருள் சக்தி அமைச்சிலும், 136 பேருக்கு நீதி அமைச்சிலும், 156 பேருக்கு மீன்பிடி அமைச்சிலும், 382 பேருக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிலும், 137 பேருக்கு சுற்றுச் சூழல் அமைச்சிலும், 92 பேருக்கு தொழில் அமைச்சிலும், 149 பேருக்கு இளைஞர்கள் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சிலும், 85 பேருக்கு ஊடகத்துறை அமைச்சிலும், 299 பேருக்கு சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சிலும், 305 பேருக்கு திறன் அபிவிருத்தி தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சிலும், 93 பேருக்கு பெருந் தோட்டத்துறை அமைச்சிலும், 12 பேருக்கு விவ்சாய சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சிலும் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

### குழந்தைகள் விடுதி விரிவாக்கம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்பு இருந்த குழந்தைகள் விடுதி விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. இங்கு முன்பு காணப்பட்ட கட்டடம் தற்போது 70 வீதமான வேலைகள் பூர்த்தியடைந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு 2.9 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளதாகவும், விரைவில் விடுதியின் கட்டிடப் பணிகள் பூர்த்தி அடைந்துவிடும் எனவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகன் தெரிவித்தார்.

### யாழ்.சிறையிலிருந்து ஆறு பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 6 பேர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இதில் 4 ஆண்களும் 2 பெணகளும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் அனைவரும் கசிப்பு, திருட்டு தொடர்பான வழக்கில சம்பந்தப்பட்டவர்கள.

இவர்களில் சிலர் மல்லாகம் நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டு 2 வருடங்கள் சிறையில் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(நெடுந்தீவு)

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்வி, சுகாதாரம் குடிநீர் விநியோகம், போக்குவரத்து, அபிவிருத்தி மற்றும் அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (113)

# ஒருவார காலத்துக்குள் தபால்கள் உரியவர்களுக்கு அனுப்பப்படும்

யாழ் பிரதான தபாலகத்தில் தேங்கிக் கிடக்கின்ற பொதிகள் விரைவில் அனைவருக்கும் கிடைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக வவுனியாவில் தேங்கிக் கிடந்த யாழ். மாவட்டத்துககான பொதிகள் தற்போது பெருமளவு வந்து சேர்ந்துள்ளமையினால், பலத்த சிரமங்களுக்கு மத்தியிலும் குறிப்பிட்டளவு ஆளணியினரைக் கொண்டு, அவர்களது மேலதிகமான முயற்சிகளின் மூலமே பொதிகள் தரம்பிரித்து, தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை பெருமளவான வெளிநாட்டுப் பொதிகளும், உள்நாட்டுப் பொதிகளும் தபால் ஊழியர்கள் மூலம், உரியவர்களைத் தொலைபேசியில் அழைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன. அத்தோடு தற்போது மேலதிகமாக மீண்டும் பொதிகள் வந்துசேர்ந்துள்ளதால், அவற்றைத் தரம் பிரித்து கொடுக்கும் வேலைகள் தாமதமடையக் காரணமாகிறது என்றும் -

எவ்வாறாயினும் இன்னமும் ஒரு வார காலத்தில் அனைத்துப் பொதிகளும் உரியவர்களிடம் கிடைக்க தாம் ஆவனசெய்வதாக யாழ்.தபாலக பிரதம தபாலதிபர் ராஜதுரை தெரிவித்தார்.

# நெடுந்தீவில் மரியன்னை ஆலயம் திறந்துவைப்பு




(நெடுந்தீவு)

நெடுந்தீவு மத்திய பகுதியில் பொதுமக்களின் வழிபாட்டுக்கென மரியன்னையின் சிறிய ஆலயம் (கெபி) அமைக்கப்பட்டு, அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நெடுந்தீவு இளைஞர், யுவதிகளின் நன்மை கருதியே தொழிற்பயிற்சி நிலையமொன்றும், அன்றையதினம் அமைக்கப்பட்ட மரியன்னையின் ஆலய வளாகத்திலேயே திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பங்குத்தந்தை எஸ்.ஜெபநேசரட்ணம் அடிகளாரின் ஆசியுடன், றோ.க.மகளிர் கல்லூரி அதிபர் அருட்செல்வி என்.இக்னேசியாவால் திறந்துவைக்கப்பட்டது. இந்தத் தொழிற்பயிற்சி நிலையம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தையற் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரியன்னையின் சிறிய ஆலயம் (கெபி) அமைத்துக் கொடுத்ததுடன், தொழிற்பயிற்சி நிலையத்துக்கான வீட்டையும் நெடுந்தீவைச் சேர்ந்த யாழ்.நிஷானந்தா நகையகத்தின் உரிமையாளர் கலாநிதி ஆ.ஆனந்தன் நெடுந்தீவு பங்குத் தந்தையிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (113)

# முகமாலை முன்னரங்க நிலைகளுக்கு கடந்தவாரம் முதல் மின் விநியோகம்!

முகமாலையில் உள்ள இராணுவத்தினதும், புலிகளினதும் முன்னரங்க காவல் நிலைகளுக்கு கடந்த 23 ஆம் திகதி முதல் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இநத நிகழ்வில் இராணுவ அதிகாரிகள், செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், புலிகளின் பிரதிநிதிகள ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதலில் புலிகளின் முன்னரங்க பகுதிக்கே மின்சாரம் வழங்கப்பட்டது. தொடர்ந்து இராணுவ முன்னரங்க காவல் நிலையங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டன.

தொடர்ந்து 24 மணி நேரமும் இந்த இடங்களுக்கு மின்சாரம் வழங்க மின்சாரசபை தீர்மானித்துள்ளது. இவ்வாறே ஓமந்தை சோதனைச் சாவடிக்கும் மிகவிரைவில் மின்சாரம் வழங்கப்படும் எனவும், தற்பொழுது இதற்கான வேலை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படுவதாகவும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழ் விழா தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8, 9, 10 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் விழா தொடர்பான ஆய்வரங்கக் கூட்டம் ஒன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது.

பிரபல எழுத்தாளரும், கல்விப் பணிப்பாளருமான கோகிலா மகேந்திரன் தலைமையில் காலை 9.30 மணிக்கு யாழ்.கல்விப் பணிமனை வளாகத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வரங்கில் சமகாலக் கல்வியின் எண்ணக்கரு என்ற பொருளில் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இந்தக் கட்டுரைகளை வடக்கு- கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த 100 பேராளர்கள் ஆய்வு செய்யவுள்ளனர். இந்த ஆய்வுகளின்போது தேர்தெடுக்கப்படும் கட்டுரைகள் எதிர்வரும் ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப்படவுள்ளன.

# பிரதேச செயலர் பிரிவு ரீதியான டெங்கு ஒழிப்பு நடவடிக்கை!

சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கு அமைய வடக்கு - கிழக்கு மாகாணத்தின்கீழ் உள்ள அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளாலும் டெங்குநோய ஒழிப்பு நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய அனைத்துப் பிரதேச செயலகர்களும் தமது பிரிவின்கீழ் உள்ள கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக டெங்குநோள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இநதச் செயற்திட்டத்தின்கீழ் சிரமதானங்களை மேற்கொள்ளுதல், குப்பை கூழங்களை அகற்றுதல், நுளம்புகளை அழிக்கும் மருந்துகளை விசுறுதல், விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துதல், துண்டுப்பிரசுரங்கள் மூலம் மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் போன்ற பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்திட்டங்களின்கீழ் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடததக்கது.

### மிதிவெடி வெடித்துக் காயம்

புன்னாலைக் கட்டுவன் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் மிதிவெடி வெடித்ததனால் காயமடைந்தார்.

டெனிஸ் மிதிவெடி அகற்றும் குழுவைச் சேர்ந்த இவர், பலாலி வீதியிலுள்ள புன்னாலைக்கட்டுவன் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தவேளை, அது தவறுதலாக வெடித்ததில் முகத்திலும், கால்ப்பகுதியிலும் சிறிய காயங்களுக்கு உள்ளாகினார்.



## பொருண்மியம்

# சேதனப் பசளையின் பயன்பாடு பயிர்களின் விளைச்சலை அதிகரிக்கும்

இன்று உலகில் பரவலாகப் பலவகையான செயற்கை இரசாயன உரவகைகளின் பாவனை அதிகரித்துவிட்டது. இதனால் விவசாயப் பொருட்களின் அளவுகள் அதிகரித்து, தரம் குறைந்துவிட்டது என்றே சொல்லலாம். ஆனால், பாரம்பரியமாக விவசாயத்தில் மிக முக்கியமான பங்களிப்பைச் சேதனப் பசளைகள் வழங்கி வருகின்றன. இந்தச் சேதனப் பசளைகளை இடுவதன்மூலம், மண்வளம் விருத்தியடைவதோடு, சிறந்த தரமான விளைச்சலையும் பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன், இந்த விவசாயப் பொருட்கள் பின் விளைவுகள் அற்றனவாகவுமுள்ளன.

உலகில் பலவகையான சேதனப் பசளைகள் உள்ளன. தாவர, விலங்குப் பாகங்கள், அவற்றின் கழிவுகள் என்பன பௌதீக, இரசாயன, உயிரியல் ரீதியில் சிதைவடைந்து உருவாகும் விளைபொருளே சேதனப் பசளை எனப்படும். பலவகையான சேதனப் பசளைகளை நாம் பயன்படுத்தலாம். அவையாவன - பயிர் மீதிகள், கூட்டெரு, பசுந்தாட் பசளை, பண்ணை எரு போன்றவையாகும்.

சேதனப் பசளை முழுமையானதொரு பசளையாகும். இதனை இடுவதால், பிரதான போசணைச் சத்துக்களும், நுண்போசணைச் சத்துக்களும் மண்ணுக்குக் கிடைக்கும்.

இந்தப் போசணைச் சத்துக்கள் சிறிதளவு கிடைத்தாலும், அனைத்து போசணைச் சத்துக்களும் கிடைப்பதால், இதனை முழுமையான பசளையாகக் கருதலாம். இதன்மூலம் மண்வளம் விருத்தியடைவதோடு, நல்ல விளைச்சல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக பின்வரும் போசணைச் சத்துக்கள் மண்ணுக்குக் கிடைக்கும். பிரதான போசணைச் சத்துக்களான, நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம், நுண்போசணைச் சத்துக்களான செப்பு, இரும்பு, மங்கனீசியம், நாகம், குளோரின் ஆகியனவாகும்.

இரசாயன பசளைகள் மண்ணில் பிடித்து வைக்கப்பட்டு, தேவையானபோது பயிர்களுக்கு விடுவிக்கப்படுவதற்கு மண்ணின் நேரயன் மாற்றீடு கொள்ளளவு அத்தியாவசியமாகும். கொள்ளளவு அதிகரிக்கும்போது, இரசாயனப் பசளைகளும் அதிகளவு மண்ணால் பிடித்துவைக்கப்படும்.

எனவே விவசாயிகள் இடும் இரசாயனப் பசளைகளிலிருந்து சிறந்த பயனைப் பெற வேண்டுமாயின், சேதனப் பசளைகளை இட வேண்டும்.

வேர்களின் வளர்ச்சிக்கு, மண்ணில் காற்றோட்டம் அதிகளவு காணப்படவேண்டும். சேதனப் பசளைகளை பாவிப்பதன் மூலம், மண்ணின் இழையமைப்பு மேம்பட்டு அவற்றில் காற்றோட்டம் விருத்தியடையும். இதனால் பயிர்கள் நன்றாக வளரும்: மண் அதிக களியாகவோ, அல்லது மணலாகவோ இருந்தால், அந்த விவசாய நிலத்தில் திருப்திகரமாக பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியாது.

எனவே, மண்ணின் இழையமைப்பை மாற்றுவதற்குச் சிறந்த வழி மண்ணுக்குச் சேதனப் பசளை இடுவதாகும்.

இந்தப் பசளைகளை இடுவதனால் ஏற்படும் இன்னொரு நன்மை, விவசாய நிலம் நீரைப் பிடித்து வைத்திருக்கும் தன்மை அதிகமாகும்.

அடிக்கடி நீர் விநியோகம் செய்யத் தேவையில்லை. இதனால் நீர்ப்பாசனச் செலவைக் குறைக்கலாம். அதிகளவான நிலப்பரப்பில் குறைந்தளவு நீருடன் செயகை பண்ணலாம்.

மண்ணரிப்பு இன்று உலகில் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. மண்ணரிப்பைக் குறைத்து, மண்வளத்தைப் பாதுகாப்பதில் சேதனப் பசளை முக்கிய பங்கை ஆற்றுகின்றன.

சேதனப் பசளைகளை பயன்படுத்துவதால் ஏற்படும் மேற்குறிப்பிட்ட நன்மைகளால், பயிர்கள் ஆரோக்கியமாகவும் வீரியமாகவும் வளரும். பயிர்கள் வீரியமாக வளர்வதால், அவை நோய் பீடைகளின் பாதிப்புக்களிலிருந்து தப்பிக் கொள்கின்றன.

இதனால் பயிரிலிருந்து கூடிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் பயிரின் உற்பத்தித் திறனும் மேம்படும். விளைபொருளின் தரமும் சுவையும் விருத்தியடையும்.

ஒளித்தொகுப்பு சிறந்த முறையில் இடம்பெறுவதற்கு காபனீரொட்சைட்டு அவசியமாகும். சேதனப் பொருட்கள் உக்கி, சிதைவடையும்போது காபனீரொட்சைட்டு விடுவிக்கப்படும். இதன்மூலம் சிறந்த முறையில் ஒளித்தொகுப்பு இடம்பெறும். இதனாலும் பயிரின் விளைச்சல் அதிகமாகும்.

மேலும் தாவர, விலங்குகளின் கழிவுப் பொருட்களைச் சேதனப் பசளையாகப் பயன்படுத்துவதனால், சூழலில் குப்பை கூழங்கள் சேரமாட்டாது.

இதன் மூலம், சூழல் மாசடைவதையும் தவிர்த்துக் கொள்ள முடியும். ★



# புரதச்சத்துக் கூடிய சிறகவரை

சிறகவரையின் தாவரவியற் பெயர் லோபோ காா்ப்பஸ் ரெற்றாகொனொலோபஸ் ஆகும். கடல் மட்டத்திலிருந்து 2000 மீற்றர் உயரம் வரையுள்ள பிரதேசங்களில் செய்கை பண்ணலாம். மணல்மண், களிமண் தரையில் நடக்கூடியது சிறகவரையின் சிறப்பம்சம். அதனுடைய அனைத்துப் பகுதிகளும் உண்ணக் கூடியதாக இருப்பதாகும். இதன் பாகங்களில் போசணைச் சத்துக்கள் அதிகளவாக உள்ளன. இதனை கால்நடைத் தீவனமாகக்கூடப் பயன்படுத்தமுடியும்.

சிறகவரை ஒரு அவரைப் பயிராகையால், இதில் மண்ணில் நைதரசனைப் பதிக்கும் வேர்முடிச்சுக்கள் உள்ளன. இதனால், சிறகவரையை நடும்போது மண் வளமடையும். இதனுடைய விதையில் 32.5 வீதம் புரதமும், 17 வீதம் கொழுப்பும் உள்ளது. இதனைத்தவிர 36 வீதம் காபோவைதரேற்றும், குறிப்பிட்டத்தக்களவு கனிப் பொருட்களும் உள்ளது.

சிறகவரை வர்க்கங்கள்.

1. டபிள்யு.பீ.பி (யு.பீ. எஸ் -122)

இதன் காய்கள் ஊதா நிறமானவை. ஏனையவர்க்கங்களைவிட நீளமானது. விதைகள் கடும் மண் நிறமானவை. எந்தக் காலத்திலும் நடலாம்.

2. ஹோர்டி - 1 (எஸ். எல். எஸ் - 44)

இதன் காய்கள் பச்சை நிறமானவை. நடுத்தர நீளமுடையவை. விதை மஞ்சள் நிறமானவை. எந்தக் காலத்திலும் நடலாம்.

3. எஸ் எவ். எஸ் - 40

இதன் காய்கள் பச்சை நிறமானவை. இதனைப் பெரும் போகத்தில் மாத்திரமே பயிரிட முடியும்.

பலவகையான வர்க்கங்கள் இருந்தாலும், மேற்குறிப்பிட்ட வர்க்கங்களே சிபாரிசு செய்யப் பட்டனவாகும்.

### நிலப்பண்படுத்தல்

ஏனைய பயிர்களுக்குப் போலவே நிலத்தை உழுது, மண் கட்டிகளை உடைத்து தயார்ப் படுத்தவேண்டும். பாத்தி அல்லது வரம்பு முறையில் நடலாம். மேடைகளை அமைக்கும் போது அளவுக்கதிகமான நீர் வடிந்து செல்லத்தக்கவாறு கான்களை அமைத்தல் வேண்டும். நீர் தேங்கி நிற்குமாயின், அழுகல் நோய் ஏற்படலாம். வரம்புகளை 75 சென்ரிமீற்றர் இடைவெளியில் அமைக்கவேண்டும். ஒரு ஹெக்ரெயரில் நடுகை செய்ய 21-23 கிலோகிராம் விதைகள் தேவை.

### விதைகளை நடுதல்

வரம்புகளில் 65 சென்ரிமீற்றர் இடைவெளியில் ஒரு இடத்தில் இரண்டு விதைகளை நடுதல் வேண்டும். பாத்திகளில் நடுவதாயின், வரிசைகளுக்கிடையில் 75 சென்ரிமீற்றர் இடைவெளியும், வரிசையில் இரு சிறகவரைகளுக்கிடையே 65 சென்ரிமீற்றர் இடைவெளியும் இருக்கவேண்டும்.

விதைகளை நட்டு 2-3 கிழமைகளின் பின்னர் 6-8 அடி உயரமான தடிகளை ஊன்றி கொடிகளை படரவிட வேண்டும்.

### பசளை இடுதல்

அடிக்கட்டுப் பசளையாக நன்கு உக்கிய மாட்டெரு ஹெக்ரெயரொன்றில் 4-5 தொன் இடல் வேண்டும். இதைத் தவிர 45 கிலோ யூரியா, 225 கிலோ செறிந்த சுப்பர் பொசுபேற்று, 65 கிலோ செறிந்த சுப்பர் மியூறியேற்றுப் பொட்டாசு என்பனவும் ஹெக்ரெயரொன்றுக்கு இடல்வேண்டும். மேற்கட்டுப் பசளையாக 4 - 10 கிழமைகளின் பின்னர் 20 கிலோகிராம் யூரியாவை இடவேணடும்.

### களைகளை நீக்குதல்

சிறகவரையின் வளர்ச்சி முதலில் மெதுவாகவே நடைபெறுகிறது. களைகளை நீக்குவதில் அவதானம்தேவை. விதைகள் முளைத்து 1,3,5,7 வாரங்களிலும் பின்னர் 12 ஆவது வாரத்திலும் களைகளை நீக்கி விட வேண்டும். களைகளை நீக்குவதற்கு இரசாயனம் பயன்படுத்த விரும்பினால், அலக்கோர் (Alachor) என்ற கிருமிநாசினியைப் பயன்படுத்தலாம். ஒரு ஹெக்ரெயருக்கு 14-24 கிலோகிராம் பாவிக்கலாம். அதன் பின்னர் இரண்டு, மூன்று தடவைகள் கைகளால் களைகளைப் பிடுங்கி விடவேண்டும்.

### நோய் பீடைத் தாக்கம்

நோய், பீடைகளின் தாக்கம் சிறகவரைக்கும் குறைவானதாகவேயுள்ளது. சிலவேளைகளில் இலையரிபுழு, காய்துளைப்புழு, போன்ற பீடைகளினாலும், காறை அழுகல் நோயினாலும் பாதிக்கப்படலாம். இவற்றை ஏனைய மரக்கறிப் பயிர்களில் ஏற்படும் நோய, பீடைத் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

### விளைச்சல்

சிறப்பாக பராமரித்தால் ஒரு ஹெக்ரெயரிலிருந்து 15-20 தொன் சிறகவரைக் காய்களைப் பெறமுடியும். சந்தைக்கு கொணடு செல்லும் பொழுது காய்கள் பாதிக்காதவாறு கயிற்றுச் சாக்குகளில் கொண்டு செல்லவேண்டும். பொதுவாக எல்லாப் பிரதேசங்களிலும் வீட்டுத்தோட்டப் பயிராகவும் செய்கை பண்ணக்கூடிய ஒரு பயிராக சிறகவரை காணப்படுகிறது.

சசி.சந்திரகாசன்

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 20/= | 30/= | 20/= | 25/= | 20/= |
| வெண்டிக்காய் | 10/= | 20/= | 30/= | 15/= | 10/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 60/= | 60/= | 80/= | 80/= | 80/= |
| கத்தரிக்காய் | 40/= | 25/= | 30/= | 40/= | 30/= | 40/= |
| பாகற்காய் | 30/= | 25/= | 30/= | 40/= | 30/= | 40/= |
| கரட் | 60/= | 50/= | 60/= | 40/= | 60/= | 60/= |
| பீற்றூட் | 20/= | 20/= | 30/= | 20/= | 15/= | 20/= |
| முருங்கைக்காய் | 60/= | 30/= | 40/= | 50/= | 60/= | 60/= |
| வெங்காயம் | 30/= | 25/= | 30/= | 30/= | 30/= | 30/= |
| பச்சை மிளகாய் | 60/= | 50/= | 60/= | 40/= | 50/= | 100/= |

# மாவகை பொதிசெய்தல்

இந்தத் தொழிலை வீட்டில் இருந்தவாறே ஓர் உபதொழிலாக மேற்கொள்ளலாம். அத்துடன், மனித வளத்தைப் பயன்படுத்துவதன்மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

அரிசி மா, உழுந்து மா, குரக்கன் மா, கடலை மா, பனை ஒடியல் மா ஆகியவற்றைப் பொதிசெய்து சந்தைப்படுத்தலாம். தானியங்கள் விரைவில் உழுத்துப்போகும் தன்மையுடையவை. இவற்றை அரைத்து மாவாக்கி, பதப்படுத்தி, பொதிசெய்து வைப்பதன் மூலம், நீண்ட காலத்துக்குப் பயன்படுத்தலாம். அறுவடைக் காலங்களில் தானியங்களைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தவேண்டும். தானியங்கள் விலையேறும் காலத்தில் இவற்றை அரைத்துப் பதப்படுத்திப் பொதிசெய்து விற்பதன்மூலம், பெருமளவு வருமானத்தைப் பெறலாம்.

பொதி செய்யப்பட்ட மாவகைகளுக்கு நல்ல சந்தை வாய்ப்பு உண்டு. நகர்ப்புறங்களில் பெரும்பான்மையானவர்கள் தொழிலுக்குச் செல்வதால், உடன் உணவு தயாரிக்கக்கூடிய மாவகைகளுக்குப் பெரும் கிராக்கி நிலவுகின்றது. தனிப்பட்டவர்கள் தானியங்களை மாவாக இடித்தெடுத்து உணவுப் பதார்த்தமாகத் தயாரிப்பதற்கான கால அவகாசமின்மையால், பொதி செய்யப்பட்ட மா வகைகள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.

மா வகைகளை அரைப்பதற்கு, அரைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தலாம். அல்லது மனித வளத்தைப் பயன்படுத்தலாம். அத்துடன், விற்தராசு, பொலித்தீன், பொலித்தீன் சீலர் போன்றவைகள் தேவைப்படும்.

பொதி செய்யப்பட்ட மா நன்கு பதப்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும். இல்லையெனில் மா விரைவில் பழுதடைந்து விடுவதுடன், சந்தை வாய்ப்பையும் இழந்து விடும். மா சிந்தாத வகையில் பொதிசெய்தல் முக்கியமான தாகும்.

# தொழில்மலர்

# பொருளொன்றின் உற்பத்திச் செலவை அறிதல் மிகமுக்கியமான ஒருபடிமுறையாகும்

ஒரு தொழிலின் வெற்றி, தொழில் நடத்துபவரின் சந்தையின் பல பரிமாணங்களைப் பற்றிய துல்லிய அறிவையும், அதனைச் செயலாக்கித் தரும் திட்டத்தையும் பொறுத்து அமையும் என்பது உண்மைதான். ஆனால், அது மட்டும் போதாது. வாடிக்கையாளர்கள் விரும்பும் பொருளை - அவர்கள் பெறக்கூடிய விலையில், ஒப்புக்கொள்ளக்கூடிய தரத்துடன் சரியான நேரத்தில் தரும் திறமையும் வேண்டும்.

அதிலும், போட்டியாளர்களைவிடச் சிறிது வித்தியாசமாக, உயர்தரமாக இந்த மூன்றையும் கொடுக்க வேண்டும். உற்பத்திக் களம் முற்றிலும் சீரமைக்கப்படாமல், இது சாத்தியமில்லை. இந்தச் சீரமைப்பை எவ்வாறு ஏற்படுத்துவது?

உற்பத்திக் களத்தில் - சாதாரண மூலப் பொருள் உருமாற்றப்பெற்று புதுப்பொருளாக மாறுகிறது. ஒரு பொருளின் மதிப்பு ஏற்றம் பெறுவது உற்பத்திகளால்தான் நடைபெறுகிறது.

இந்த மதிப்பு மாற்றம் படிப்படியாக ஐந்து நிலைகளில் ஏற்படுகிறது. அவை முறையே- வடிவமைப்பு, மூலப்பொருள் தருவிப்பு, உற்பத்தி, விநியோகித்தல், விற்பனைக்குப் பிந்திய சேவையாகும்.

ஒவ்வொரு கட்டத்திலும் நமது முனைப்புகள், செயல்கள் பொருளின் மதிப்பைப் படிப்படியாக உயர்த்துகின்றன. இதை மதிப்பு சங்கிலி என்று சொல்வார்கள்.

உற்பத்திச் சீரமைப்பு இந்த ஐந்து அம்சங்களையும் தழுவியே அமையும்.

உற்பத்திக் காலத்தில் எமது நாளைய எதிர்பார்ப்புகள் யாவை?

இது அடுத்தகட்ட ஆய்வு. இன்றைய வளக்குறைவுகள் ஒரு பெருந்தடையாக இல்லாவிட்டால், இந்த ஐந்து அம்சங்களில் எத்தகைய முன்னேற்றங்களெல்லாம் சாத்தியமாக முடியும் என்று முதலில் ஆராய வேண்டும்.

வளக்குறைவுகளையும் கூடவே நினைத்துப் பார்த்தோமேயானால் - முன்னேற்றங்களைப் பற்றிய சிந்தனை தடைப்பட்டுப் போகும். ஆகவே, வளக்குறைவுகளைப் பற்றிய சிந்தனையை விலக்கி என்னென்னவெல்லாம் சாத்தியம் என்று சிந்திக்கவேண்டும்.

சரியான சீரமைப்புடன் எமது நிறுவனம் செயல்படும்போது வளங்களும் எம்மிடையே வந்துசேரும். சிறிது காலம் தேவைப்படலாம் அவ்வளவுதான்.

அதனால்தான், முன்னேற்றங்களைப் பற்றி நினைக்கும்போது, வளக்குறைவுகளைப் பற்றிச் சிந்திப்பதைவிட்டு எவையெல்லாம் சாத்தியம் என்ற திறந்த முனைச் சிந்தனையுடன் எண்ணிப் பார்க்கவேண்டும். இது இரண்டாவது கட்ட ஆய்வு.

இந்த இரண்டு நிலைகளையும் சில எடுத்துக்காட்டுகள் கொண்டு நாம் புரிந்து கொள்ளலாம்.

முதலில் வடிவமைப்பை எடுத்துக் கொள்ளுவோம் - இன்றும் எம்மிடையே ஒரு நிறுவனம் இன்னொரு நிறுவனத்தைப் பார்த்து அவர்களது பொருள்போலவே செய்யும் திறமை இருக்கிறது. இது இன்றைய நிலை. ஆனால், கணினியை வைத்துக்கொண்டு வித்தியாசமான முறையில் வடிவமைப்புச் செய்வது சிறந்த முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. இது நாம் எதிர்பார்க்கும் முன்னேற்றமாகும்.



மூலப்பொருள் தருவிக்கும் துறையில், இன்று உள்ளூர்ச் சந்தையில் பொருள்களை வாங்கிக்கொண்டு இருக்கக்கூடும். பொருள்களின் உற்பத்தியாளர்களிடமிருந்து குறைந்த விலையில் நேரடியாகப் பொருள்களைத் தருவிப்பது, ஒருவித முன்னேற்றம்.

உற்பத்தித்துறையில் இன்று திறமை குறைந்த இயந்திரத்தில், குறைந்தளவில், சற்று அதிகசெலவில் பொருள்களை உற்பத்தி செய்துகொண்டு இருக்கின்றோம் என்று வைத்துக் கொள்வோம். இது இன்றையநிலை. தரமாக, சரியான அளவுகளுடன் சீராக, வேகமாக உற்பத்திசெய்யும் இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது எமது நாளைய எதிர்பார்ப்பு.

இன்றைய நிலைக்கும், எமது நாளைய எதிர்பார்ப்புக்களுக்கும் இடையில் எவ்வளவு இடைவெளியுள்ளது என்று இப்போது எண்ணிப் பார்க்கவேண்டும். இது மூன்றாவது கட்ட ஆயவு. இதை இடைவெளி ஆய்வு என்பார்கள்.

இந்த இடைவெளியை எப்படித் திட்டமிட்டுப் படிப்படியாக ஒரு காலகட்டத்துக்குள் செய்து முடிக்கப்போகிறோம்.

சில முன்னேற்றங்களை உடனடியாகச் செய்துவிட முடியும். சில முன்னேற்றங்களைக் காணக் கணிசமான முதலீடு தேவைப்படலாம். ஆனால், என்னென்னவற்றை எப்பொழுது செய்யலாம் என்பதற்கு ஒரு திட்டம் தீட்டிவிட்டோமானால், படிப்படியான வளர்ச்சிக்குப் படியமைத்து விட்டோம் என்று நம்பமுடியும்.

உற்பத்தியைப் பொறுத்தவரை முன்னேற்றங்களுக்கு வாய்ப்புகள் அதிகம். ஆகவே, அதன் முழுப் பரிமாணங்களையும் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியம். வாடிக்கையாளர் திருப்தி மூன்று முக்கிய அம்சங்களினால் ஏற்படுகிறது. அவற்றில் ஒன்று, சரியான செலவினங்களைக் கட்டுப்படுத்தும்போது, சரியான விலையில் விற்பது சாத்தியமாகிறது. செலவினங்களைக் கட்டுப்படுத்துவது எப்படி?

உற்பத்திச் செலவைக் குறைக்க, மேலாண்மையில் இன்று மேற்கொள்ளப்படும் ஒரு அணுகுமுறை, அடிப்படைச்செலவு ஆய்வு என்பதாகும். இது மிகவும் சுவையானது. ஆனால், மிகவும் புரட்சிகரமான ஒரு செயல்முறை. இதைப் பற்றி விவரிப்பதற்கு முன்னர் ஒரு பொருளின் அடக்கச் செலவினங்களைக் கணக்கிலிடுவது எப்படி என்று சற்றுப் பார்ப்போம்.

உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பொருளுக்கும், நேரடிச் செலவு மற்றும் மறைமுகச் செலவு என்று இரண்டு செலவுகள் உள்ளன.

மூலப்பொருள் செலவு, ஒவ்வொரு பொருளுக்கும் இவ்வளவு என்று அறுதியிட்டுச் சொலல முடியும். இவை நேரடிச் செலவுகளாகும்.

பணியாளர் சம்பளம், மின்செலவு, இயந்திரங்களின் பராமரிப்புச் செலவுகள் என்று ஒவ்வொரு பொருளுக்கும் இவ்வளவு அதாவது, ஒரு மாதத்துக்கு இவ்வளவு என்று நேரடியாகச் சொல்லமுடியாது. இத்தகைய செலவினங்களை மேலதிகமான செலவுகள் என்று சொல்லலாம்.

அடிப்படைச் செலவை நிர்ணயிப்பதில் இந்த மேலதிக செலவுகள் ஒவ்வொரு பொருளுக்கும், எந்தவகையில் பங்கீடு செய்யப் போகிறோம் என்பதுதான் முக்கியமான பிரச்சினையாகும்.

சிலர், கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு, மூலப்பொருள் மொத்தச் செலவு எவ்வளவு? மற்றைய எல்லாச் செலவுகளும் எவ்வளவு? என்று அறிந்து, மற்றைய செலவுகளை மூலப்பொருள் செலவின் வீதமாக மாற்றி வைத்துக்கொள்வார்கள்.

ஒவ்வொரு பொருளுக்குமான அடிப்படைச் செலவை நிர்ணயிக்க, அதன் மூலப்பொருள் செலவைக் கணக்கிட்டு, அதற்கு மேலே மேலதிகமான செலவையும் சேர்த்துக் கணக்கிடுவார்கள்.

மூலப்பொருள் பல்வேறு வகையாக இருத்தல், இந்தமுறை தவறான முடிவுகளைத் தரும்.

மேலதிக செலவை நேரடிச் செலவுடன் கூட்டினால், பொருளின் உற்பத்திச் செலவை அறியமுடியும். இவைதான் அடிப்படைச் செலவாகும்.

செலவு கணித்தல் ஒரு விரிவான பாடம். சில அடிப்படைகளை மட்டுமே நாம் பார்த்துள்ளோம். செலவு என்பது வேறு, விலை என்பது வேறு. செலவு எம்மால் நிர்ணயிக்கப்படுகிறது. விலை சந்தையில் நிர்ணயிக்கப்படுகிறது.

போட்டி நிறைந்த சந்தையில், விலையைப் பொறுத்தவரையில் நாம் அதிகமாக எதுவும் செய்ய முடியாது. ஆனால், உற்பத்திச் செலவு எவ்வளவு என்பதை நாமே நிர்ணயிக்கிறோம்.

செலவு என்பது ஒரு உண்மை. அதைத் துல்லியமாகக் கணக்கிட்டால்தான், நாம் மிக முக்கியமான சில முடிவுகளை எடுக்கமுடியும். உற்பத்திச் செலவை அறிதல், வெற்றிகரமாகத் தொழில் நடத்த மிகமுக்கியமான ஒரு படியாகும். உண்மைநிலை அறியாமல்- சுயமாக முடிவு எடுத்தல் தவறான முடிவுகளுக்கு வழிகோலும். புதிய மேலாண்மையில் பாரம்பரிய பழைய முறைகளில் இருந்து மேலே சென்று, புதிய முறைகள் வந்துவிட்டன.

அடிப்படைச் செலவு ஆய்வு, புதிய மேலாண்மையில் ஒரு முக்கியமான அணுகுமுறை. புரட்சிகரமாகச் செலவைக் குறைக்க இது ஒரு சிறந்தமுறை. உற்பத்தித்திட்டத்தில் இது முக்கிய அங்கம் வகிக்கவேண்டும்.

இன்னொரு முக்கிய அணுகுமுறை, செயலை ஆதாரமாகக் கொண்டு விலையை நிர்ணயித்தல். இந்த இரண்டு அணுகுமுறைகளும் சேதாரங்களின் மேல் நாம் தொடுக்கப்போகும் போரில் எமது வலுவான ஆயுதங்கள். ☆

## சந்தைப்படுத்தலில் வெற்றி பெற சில சந்தைப்படுத்தல் அணுகுமுறைகள்

இன்று சில நிறுவனங்கள் தமது வியாபாரத்தை அல்லது உற்பத்தியை ஆரம்பத்திலேயே நிறுத்தி விடுகின்றன. அத்துடன், அவை நட்டத்தையும் அடைந்து கொள்கின்றன. இதற்கு அவர்களது சந்தைப்படுத்தல் தவறுகளும் ஒரு காரணமாகக் காணப்படுகின்றது. இந்த நிலையில் இருந்து விடுபட, நிறுவனங்கள் சந்தை ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியமாகின்றது. பின்வரும் விடயங்களைப் பூர்த்தி செய்வதன் ஊடாக சந்தை ஒன்றை உருவாக்கமுடியும்.

01. மக்களுக்கு எந்த உற்பத்தி தேவையாக இருக்கின்றது.
02. மக்கள் பொருளை வாங்கும் திறன் கொண்டிருக்கவேண்டும்.
03. மக்கள் அந்தக் கொள்வனவுத் திறனைப் பயன்படுத்த விரும்பவேண்டும்.
04. இவ்வாறு திறமையைக் கொண்டவருக்கு வாங்கும் உரிமை காணப்படவேண்டும்.

மேற்கூறிய விடயங்களினூடாக.

ஒரு சந்தையை இலகுவாக உருவாக்கிக் கொண்டவர்கள் எதிர்நோக்கும் மிகப்பாரிய பிரச்சினைதான் 'இலக்கு சந்தை' ஆகும். அதாவது யாரை நோக்கி எப்படி சந்தைப்படுத்துவது? இதற்குத் தீர்வுகாண இரண்டு முறைகளைப் பயன்படுத்தலாம்.

**i. முழுச் சந்தை அணுகுமுறை**

ஒரு நிறுவனமானது தனிச்சந்தைக் கலப்பொன்றை அமைத்து, குறித்த உற்பத்தியை முழுச்சந்தைக்கும் செலுத்தும்போது அது முழுச்சந்தை அணுகுமுறை என அழைக்கப்படும். இதனூடாக சீனி, உப்பு போன்ற உணவுப் பொருட்களும் வேறுபாடு இல்லையெனக் கருதும் உணவுப் பொருட்களையும் சந்தைப்படுத்தலாம். இங்கு பிரித்தறிதல் உத்தி எனப்படுவது முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது தமது பொருட்களை ஏனைய போட்டிப் பொருளிலிருந்து நன்மைகளை வேறுபடுத்திக் காட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

**ii. சந்தையை கூறுகளாக அணுகுமுறை**

வேறுபட்ட தேவைகளைக் கொண்ட நுகர்வோரை வேறுபடுத்தித் தொகுதிகளாக்கும் நடைமுறையே இதுவாகும். இதனூடாக விலை அதிகமான வீடு, கார் போன்ற பொருட்களைச் சந்தைப்படுத்தலாம். வீட்டின் மாதிரியில் ஒரே விருப்பு மாதிரி கொண்டோர் என வகைப்படுத்தலே சந்தைக் கூறுகளாக்கல் எனப்படும்.

சந்தைப்படுத்தல் முகாமையினால் இரண்டு வகையான உத்திகள் பயன்படுத்தப் படுகின்றன.

**i. ஒரு முனைப்படுத்திய உத்தி**

ஒரு முனைப்படுத்திய உத்தி என்பது தனி ஒரு சந்தைக் கலப்பினூடாக ஒரு சந்தைக்குள் செலுத்தும் போது அது நிறுவனத்தின் ஒரு முனை சந்தைப்படுத்தல் எனப்படும். இது ஒரு நிறுவனம் பிரபல்யப்படுத்தப்படுவதை அனுமதிக்கின்றது.

**ii. பல்வகைப்பட்ட உத்தி**

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூறுக்கும் ஒவ்வொரு சந்தைப்படுத்தல் கலப்பை விருத்திசெய்து, அந்தக் கூறுகள் மீது செலுத்துவதனூடாகத் தனது விற்பனையை அதிகரிக்க முடியும். இந்த முறையைப் பயன்படுத்துவதால் அதிக செலவு கர்ணப் படும்.

இவற்றின் ஊடாக சந்தைப்படுத்தலின் சரியான வடிவத்தைப் பெற்றுக்கொள் ளலாம்.

-வணிகன்-

## தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
| --- | --- | --- | --- |
| கிழக்குப் பல்கலைக் கழகம் | மருத்துவர் | மருத்துவ மானிப் பட்டதாரி 3 வருட அனுபவம் அல்லது பதிவுசெய்யப்பட்ட மருத்துவர். வயதெல்லை 45 வருடங்களுக்குள். | 10.09.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.




# தாயக மக்களின் தேவைக்கேற்ப நெல் உற்பத்தி இடம்பெறுகிறது

## பொருண்மிய பொறுப்பாளர் கரிகாலன்

தமிழீழத் தாயகத்தில் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு நெல் உற்பத்தி இடம்பெறுவதாகத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மன்னார் கறுக்காய்க் குளத்தில் நடைபெற்ற விவசாய அமைப்புக்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர் தாயகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லில் 60 வீதமான நெல் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் தெரிவித்த அவர்,

ஏனைய தானியப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேம்படுத்த அனைவரும் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

முன்னதாக நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை மன்னார் மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் முல்லைவீரன் ஏற்றினார்.

நிகழ்வில் விவசாய அமைப்பின் கொடிகள் ஏற்றப்பட்டன. கருத்துரைகளைத் தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன்,அரச அதிபர் வெ.விஸ்வலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் முன்னதாக துறைசார் போட்டிகள் நடைபெற்றன.

# நன்னீர் மீன்பிடி சங்கம் தெரிவு

வன்னேரிக் கிராமத்தில் அமைந்துள்ள வன்னேரிக்குளத்தில் நன்னீர் மீன்பிடிக்கும் சங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பல வருடங்களாக இந்தக் குளத்தில் வருடா வருடம் நன்னீர் மீன்கள் பிடிக்கப்பட்டு கருவாடாக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. மேலும் இதனை அடிப்படையாக வைத்து கிராம பொருளாதார முன்னேற்றம் கருதி இந்த மீன்பிடிச் சங்கம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# எழுச்சிப் பேரவை நிர்வாகம் தெரிவு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சிவிக் சென்ரர் வலய தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாகத் தெரிவு கடந்த புதன்கிழமையன்று மாலை 4.30 மணிக்கு வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் சோழிலவன் தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது.

நிர்வாகங்களின் செயற்பாடு அணுகுமுறை போன்றனவும் இடம்பெற்றதுடன் நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

செயலாளராக ரூபசிங்கமும், உபசெயலாளராக க.பரராசசிங்கமும், பொருளாளராக ஆழ்வாப்பிள்ளையும் தெரிவுசெய்யப்பட்டனர். கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் திருமாறன் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் பொனனுத்துரை ஆகியோர் நிகழ்த்தினர். (9)

# ஆனைவிழுந்தான் கிராமம் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்பு

ஆனைவிழுந்தான் குளத்தை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஆனைவிழுந்தான் கிராமம் பல வருடங்களின் பின்னர் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தின் ஆனைவிழுந்தான் குளமும், பொது நோக்கு மண்டபமும், உள்ளக வீதிகளும் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு கிராம மக்களுக்கு ஜீவனோபாயக் கடனும் வழங்கப்பட்டது. இதனை பகுதி பகுதியாகத் திருப்பிச் செலுத்திவருவதுடன், இந்த உதவிகள் மூலம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

மேலும் இந்தத் திட்டப் புனரமைப்பு பூரணப்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதியன்று கிராம மக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

# உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் கடமை நிறைவேற்றும் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளருக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களைக் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றுபவர்கள் மட்டும் அனுப்பிவைக்கலாம்.

விண்ணப்பங்களைச் சுயமாகத் தயாரித்து எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (9)

# தாய்மடியின் தாலாட்டு ஒலிப்பேழை அறிமுகவிழா

தாய்மடியின் தாலாட்டு ஒலிப்பேழை அறிமுகவிழா நேற்றுமுன்தினம் 4 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

எல்லைப்படை மாவீரர்களின் நினைவாக தமிழீழ விடியல் இசைக்குழுவின் தயாரிப்பில் உருவான "தாய்மடியின் தாலாட்டு" என்னும் இந்த ஒலிப்பேழையின் அறிமுக விழாவும், இசைநிகழ்வும் கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆகாண்டீபன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதி லெப்.கேணல் நகுலன் ஏற்றினார். தொடர்ந்து, பொதுச்சுடரைக் கிளிநொச்சி வர்த்தக சங்கச் செயலாளா ந.நவரத்தினராஜா ஏற்றிவைத்தார்.

எல்லைப்படை முதல மாவீரன் அப்பனின் திருவுருவப் படத்துக்கு அவரது துணைவியார் ஈகைச்சுடரை ஏற்றிவைத்தார்.

சிறப்புரையை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிச் சிறப்புத் தளபதி லெப்.கேணல் நகுலன், லெப். கேணல் ராஜன், கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் மாஸ்ரர் ஆகியோர் ஆற்றினர். அறிமுக உரையைக் கவிஞரும் புலிகளின் குரல் அறிவிப்பாளருமான பொன் காந்தன் வழங்கினார்.

மதிப்பீட்டு உரையை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் நிகழ்த்தினார்.

முதல் பிரதியை முதல் எல்லைப்படை மாவீரரின் மனைவி உமா பெற்றுக்கொண்டார். (108)

# கோட்டக் கல்வி அதிகாரிகள் நியமனம்

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள பளை, கரைச்சி, கண்டாவளை ஆகிய கோட்டங்களுக்குக் கோட்டக்கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கண்டாவளை கோட்டக்கல்வி அதிகாரியாக வீ.இராசகுலசிங்கமும், கரைச்சி கோட்டக்கல்வி அதிகாரியாக திருமதி இ.அரியரத்தினமும், பளைக் கோட்டக்கல்வி அதிகாரியாக சி.இராமலிங்கமும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த 11 ஆம் திகதி முதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (9)

# ஜெசிக் நிறுவனத்தின் திட்டங்கள் நடைமுறைப்படுத்தாமையால் நிதி திரும்பும் அபாயம்

ஜெசிக் நிறுவனத்தின் நிதியால் கிளிநொச்சியில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் உரிய முறையிலும் உரிய காலப்பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்படாதல் இந்த நிதி திரும்பிச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதாரப் பிரிவுகள் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கும், சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குமான 7.7 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைகளை ஆரம்பிப்பதற்கென 2 மாதங்களுக்கு முன்னரே கேள்வி கோரப்பட்டிருந்தும் இன்னமும் இது தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இவ்வாறு வேலைகள் தாமதமடையுமாயின் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் வாய்ப்பு இருப்பதாகவும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மாவட்ட அரச அதிபருக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஏற்கனவே கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சத்திர சிகிச்சை கூடம் மற்றும் பூநகரி மருத்துவமனைக்கான மருத்துவர் விடுதி என்பவற்றுக்காக ஒதுக்கப்பட்ட நிதி வேலைகள் ஆரம்பிக்காத காரணத்தால் திரும்பிச் சென்றமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



புனரமைப்பதற்காக கிரவல் பறிக்கப்பட்டுக் காணப்படும் புதுக்குடியிரப்பு மருத்துவமனைக்கு முன்னான வீதி. படம்: ரமணன

# வவுனியாவில் கடும் வரட்சி 22,805 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியா மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக 22 ஆயிரத்து 805 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, வவுனியா மாவட்ட அரச செயலகப் புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்கென ஐந்து மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும்,

மக்களின் குடிநீர்த் தேவைக்கென ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்களின் தேவைக்கென 20 நீர்த்தாங்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

இங்குள்ள அதிகளவான குளங்களில் நீர்வற்றிக் காணப்படுவதால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ர)

# மன்னார் விடத்தல் தீவு ஆலயம் 15 லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு

மன்னார் விடத்தல் தீவு புனித யாகப்பர் தேவாலயம் 15 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு படையினர் இந்த ஆலயத்தின் மீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது இந்த ஆலயத்தில் இடம்பெயர்ந்து தஞ்சம் அடைந்திருந்த 3 அப்பாவி தமிழ் மக்கள் உயிரிழந்ததுடன் 15 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தனர். எறிகணை தாக்குதலினால் இந்த ஆலயமும் பெரும் அழிவுகளை சந்தித்திருந்தது.

தற்போது இந்த தேவாயலம் 15 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கின்றது.



நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்படும் முல்லை மாவட்டம் இரணைப்பாலை மந்துவில் வீதி. படம்: ரமணன

# அம்புலன்ஸ் வண்டி அன்பளிப்பு

வட்டக்கச்சி வைத்தியசாலைக்குப பிராந்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளரால் அம்புலன்ஸ் வண்டியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இதனால், இந்தப் பகுதி அவசர நோயாளர்களுக்குப் பெரும் உதவியாக உள்ளது.

அத்துடன் இந்த மருத்துவமனையில் இயங்கிவருகின்ற மகப்பேற்று நிலையத்துக்கு இடம் போதாமையால் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதுடன், மின்பிறப்பாக்கி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. இதனால், குளிர்சாதனப் பெட்டியில் மருந்துகளை வைத்துப் பாதுகாக்கக்கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(9)



புதுக்குடியிருப்பில் அமைக்கப்பட்டு வரும் பிரதேசசபைச் செயலம். படம்: ரமணன

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒரு தலையா*
*உள்கோட்டம் இன்மை பெறின்*
திருக்குறள்

## நமது நோக்கு

# சரியான கருத்தை முன்வைத்துள்ள சொல்ஹெய்ம்!

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளின் முன்னெடுப்புக்கு மிகவும் அவசியமானதான போர்நிறுத்த சூழலுக்கு, இன்று ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தலுக்கு என்ன காரணம் என்பதை நோர்வே அனுசரணையாளர்கள் இப்போது நன்கு புரிந்துகொண்டுள்ளார்கள் என்றே எண்ணத் தொன்றுகின்றது.

கடந்த 3 மாதகாலப் பகுதிக்குள் - கடந்த மூன்றாண்டு காலமாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் போர்நிறுத்த அமைதிச் சூழலுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன், அதனை தொடர்ந்தும் பாதுகாப்பதென்பது சாத்தியமாகுமா என்ற சந்தேகமும் வலுப்பெறத் தொடங்கியுள்ளது.

இந்தச் சந்தேகம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, முழு சர்வதேச சமூகத்துக்குமே இப்போது ஏற்படத் தொடங்கியுள்ளதன் வெளிப்பாடே சமாதானத்தை முன்னெடுக்க வலியுறுத்தும் இலங்கை அரசின் மீதான உலக நாடுகளின் அழுத்தங்களாகும்.

ஆனால் இத்தகைய அழுத்தங்களெல்லாம் இலங்கை அரசை சமாதான முயற்சிகளை நோக்கி நகர்த்துமா என்பதே கேள்வி.

தமிழ் மக்களை மட்டுமன்றி சர்வதேச சமூகத்தையுமே சமாதான முயற்சிகளில் ஏமாற்றி காலங்கடத்தும் தந்திரோபாயத்தையே கையாளும் இலங்கை அரசும், அதன் ஜனாதிபதியும், இது தொடர்பாக ஒரு இறுக்கமான உறுதியான நிலைப்பாட்டை எடுப்பார்கள் என நம்பமுடியாத நிலையையே இன்று காணக்கூடியதாகவுள்ளது.

உறுதியான நிலைப்பாட்டை எடுக்காது விடினும் பரவாயில்லை, இருக்கும் அமைதி நிலையைக் குழப்பி சமாதானத்தை முற்றாகவே சீர்குலைத்து, மீண்டுமொரு போர்ச் சூழலை உருவாக்குவதற்கான அச்சமூட்டும், அரசியல் மற்றும் இராணுவ உத்திகளைக் கையாண்டு வருவதுதான் அரசின் பிரதான பணியாக இருக்கிறது போல் தோன்றுகின்றது.

குறிப்பாக கிழக்கில் தற்போது நிலவும் பீதியூட்டும் சூழலுக்கான காரணம் என்னவென்பதை விளக்கவேண்டிய அவசியமேயில்லை.

அரசாங்கமும், இராணுவ புலனாய்வுத்துறையும் சில மாதங்களின் முன்னர் கிழக்கில் கருணாவினால் ஏற்பட்ட குழப்ப நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி சமாதான பேச்சுக்களுக்கு இடையூறு செய்யவும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தவும் எதை எதையெல்லாம் செய்தார்கள் என்பது மக்கள் அறிந்தவிடயமேயாகும்.

அவர்களின் இந்த தமிழ்த்தேசியத்தின் கட்டமைப்பை சிதைக்கும் உள்நோக்குடனான சதித்திட்டங்களை நடைமுறைப்படுத்த இராணுவம் தம்மோடு இணைந்து செயற்படும் தமிழ் ஆயுதக் குழுக்களை கைக்கூலிகளாகப் பயன்படுத்தி வருவதும் யாவரும் அறிந்த ஒன்றேயாகும்.

ஆனாலும், இக் குற்றச்சாட்டுக்களை அரசு நிர்தாட்சண்யமாக மறுத்துவருகின்ற போதிலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் இராணுவத்தினருக்கும் தமிழ் ஆயுதக்குழுக்களுக்கும் - குறிப்பாக கருணா கும்பலைச் சேர்ந்தவர்களுக்கும் - இடையேயான உறவு மற்றும் செயற்பாட்டு நிலைமை நிரூபிக்கப்பட்டே உள்ளது.

கொட்டாவ இராணுவ புலனாய்வுப் பிரிவின் இரகசிய பாதுகாப்பு மறைவிடம் கொலைச்சம்பவம் இதற்கு மிகச்சிறந்த உதாரணமாகும். இச்சம்பவத்தின்போது - அதாவது கருணா குழுவினருக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டு மோதலில் கொல்லப்பட்டவர்களுள் இராணுவ புலனாய்வு பிரிவைச் சேர்ந்த நபர் ஒருவரும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டபோதும், அரச தரப்பும் படைத்தரப்பும் மிக வேகமாகவே அதற்கு மறுப்புத் தெரிவித்து 'சளாப்ப' முயன்றது நினைவிருக்கலாம்.

உண்மையில் கிழக்கின் பதற்ற நிலையைத் தவிர்த்து அங்கு போர்நிறுத்த உடன்பாட்டுக்கு ஏற்பட்டு வரும் ஆபத்தான சூழலை மாற்ற, அங்குள்ள கருணா குழுவைச் சேர்ந்த நபர்களுக்கு இராணுவம் பாதுகாப்பு ஆதரவையும், ஆயுத உதவிகளை வழங்கி அமைதிச்சூழலை குழப்ப மேற்கொண்டுவரும் செயற்பாடுகளை நிறுத்தவேண்டுமென விடுதலைப் புலிகள் தரப்பில் பல தடவைகள் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டும் அரசு அதனை கவனத்தில் கொண்டதாகவே தெரியவில்லை.

அரசின் இந்த அலட்சியப்போக்கு சமாதானத்தின் மீதான அதன் அக்கறையின்மையினதும் யுத்தம் மீதான அதன் பெருவிருப்பினதும் வெளிப்பாடேயாகும்.

இந்த நிலையில் கடந்த இரு வார காலத்துள் கிழக்கின் நிலைமைகள் பீதியூட்டும் வகையிலும், சமாதானத்தை நிரந்தரமாக கேள்விக்குறியாக்கும் வகையிலும் அதிகரித்தமையையடுத்து விடுதலைப் புலிகள் தரப்பில் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதுடன், தமிழ் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கையினால் போர்நிறுத்த உடன்பாடு பாதிப்படையும் ஆபத்து உள்ளதாக அறிவுறுத்தவும்பட்டது.

கிழக்கின் நிலைமைகளை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு விடுதலைப் புலிகள் பல தடவைகள் விளக்கியபோதும் அதற்கு எந்த விதமான தீர்க்கமான முடிவும் எடுக்கப்படவில்லை என்பதே கவலை தரும் விடயமாக இருந்தது.

எனினும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ள ஒரு கருத்து - சமாதான முயற்சிகளுக்கு இன்று குந்தகமாக இருப்பது கிழக்கு மாகாண சம்பவங்கள்தான் என்பதை ஒப்புக்கொள்வதாக இருந்தபோதும் - அந்த சம்பவங்களுக்கு பின்னணியில் யார் உள்ளார்கள் என்பதை தெளிவுபடுத்த தவறிவிட்டது.

ஆனால், உலக சமாதானத்துக்கான ஏற்பாட்டுக்குழுவினருக்கு இலங்கை சமாதான முயற்சிகள் குறித்து விளக்கமளிக்கும் கலந்துரையாடலின்போது, நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் - புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தமிழ் ஆயுதக்குழுக்களை ஈடுபடுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று கூறியிருப்பது பிரச்சினையின் மூலத்தை நோர்வே தரப்பு சரியாக இனங்கண்டு வெளிப்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும்.

இது உண்மையில் உடனடியாக அமுல்படுத்த வேண்டிய விடயமாக சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு வலியுறுத்தி கூறவேண்டும்.

இது இப்போதைய அவசிய தேவையாகவும் உள்ளது.

இல்லையேல், போர்நிறுத்தம் சிதைவுறுவதும், போர் மீண்டும் ஆரம்பமாகும் சூழலுக்கு நாட்டை இட்டுச் செல்லும் அளவுக்கு நிலைமைகள் மோசமடைவதும் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

## நாடும் நடப்பும்




# மட்டக்களப்பில் ரயில் தடம்புரண்டதால் சேவைகள் முற்றாக பாதிப்படைந்தது!

வாழைச்சேனை, புன்னாலைப் பகுதி ரயில் ஒன்று தடம் புரண்டதன் காரணமாக கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. இந்த விபத்து காரணமாக மட்டக்களப்பு ரயில் சேவை தற்போது பொலநறுவை வரை மட்டுமே நடத்தப் படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை பி.ப. 2மணியளவில் மட்டக்களப்பில் இருந்து வெலிக்கந்த நோக்கிச் சென்றுகொண்டிருந்த சரக்கு ரயில் ஒன்று, வாழைச்சேனைக்கும் புனானைக்கும் இடையில் உள்ள 189 மைல் கல்லுக்கு அண்மையாக தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

மூன்று எண்ணெய் தாங்கிகள், இரண்டு பயணிகள் பெட்டிகளுடன் சென்ற இந்த ரயிலின் இரண்டு பெட்டிகள் தடம் புரண்டு சேதமடைந்தன.

வெப்பத்தினால் தண்டவாளம் விரிவடைந்ததன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக விசாரணை நடத்திய உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், ரயில் சேவை இன்னும் ஓரிரு தினங்களில் வழமைக்குத் திரும்பும் எனவும் மட்டக்களப்பு ரயில்வே அதிகாரி சிவலிங்கராசா தெரிவித்தார்.

## பட்டிருப்பில் ஹர்த்தால்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்புத் தொகுதியில் நேற்றுமுன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்துறை பொறுப்பாளர் பாவா, புனர்வாழ்வுப் பொறுப்பாளர் யோகா ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்தே இந்த பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பட்டிருப்புத் தொகுதியில் துறை நீலாவணை, ஆலையடி வேம்பு, ஆரையம்பதி ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினம் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தது.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், கூட்டுறவுச்சங்கங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

பட்டிருப்பிலிருந்து வெளியூருக்கும், உள்ளூருக்குமான போக்குவரத்து சேவைகள் இடம்பெறவில்லை.

பட்டிருப்புத் தொகுதியினுள் வீதிகள், பொது இடங்களில் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டதாக மட்டக்களப்பு செய்திகள் தெரிவித்தன.

## சமூக விஞ்ஞான படிப்புவட்ட மாதாந்தக் கருத்தரங்கு!

எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று 'வடக்கு - கிழக்கின் பேண்தகு அபிவிருத்திக்குப் பொருத்தமான தந்திரோபாயம்' எனும் விடயத்தில் கருத்துரை, கலந்துரையாடல் ஆகியவற்றை - யாழ். நகரில் ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு சமூகவிஞ்ஞான படிப்பு வட்டம் நடத்தவுள்ளது.

கருத்துரையை யாழ்.பல்கலைக்கழக பொருளியற் துறை பேராசிரியர் வி.நித்தியானந்தன் நிகழ்த்துவார். அதனையடுத்து துறைசார்ந்தோர், ஆர்வலர்கள், மாணவர்கள் ஆகியோருடன் கருத்துரை விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறவுள்ளது.

சமூகவிஞ்ஞானத்துறைகளில் கற்கும் மாணவர்கள், சமூகவிஞ்ஞான ஆர்வலர்கள், அபிவிருத்தி திட்டமிடலாளர்கள், நிர்வாகத்துறை சார்ந்தவர்கள் போன்றோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்து கலந்துரையாடவும், பயன்பெறவும் இந்தக் கருத்தரங்கு சந்தர்ப்பம் வழங்குகிறது என்று படிப்பு வட்ட ஏற்பாட்டாளர்கள் அறியத் தருகின்றனர்.

## நெடுந்தீவு கடற்படைமுகாமை பலப்படுத்தும் படையினர்!

நெடுந்தீவு மத்திய பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாம் கடந்த ஒருவாரகாலமாகப் பலப்படுத்தப்பட்டுவருகின்றது.

புதியதாக முட்கம்பிவேலிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், காவலரண்களும் அமைக்கப்பட்டுள்ளது. பச்சைத் தென்னோலைகள் மக்கள் குடியிருப்புக்களில் இருந்து பெருமளவில் வெட்டப்பட்டு முகாம் அமைந்துள்ள பகுதியைச்சுற்றி மறைப்புக்களும் அமைக்கப்பட்டுவருகிறது.

கடற்படையினரால் அத்துமீறியமுறையில் நெடுந்தீவு தபாலக வளாகத்தில் அமைக்கப்பட்ட இந்த முகாம், நெடுந்தீவு பிரதான வீதியை அண்டியிருப்பதால் நாளாந்தம் அதனூடாகப் பயணிக்கும் மக்கள் மத்தியில் பெரும் அச்சநிலை உருவாகியுள்ளது.

இதேவேளை, வீதியோரமாக உள்ள தபாலக சுற்றுமதில் ஒருபகுதி உடைக்கப்பட்டு கடற்படைமுகாமுக்குரிய வாசல் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (113)

## பட்டதாரிகளின் அடுத்த நியமன பட்டியல் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது!

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ், இரண்டாம் கட்டமாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் எதிர்வரும் 31ஆம் திகதி வெளியிடப்படும் என நிதி அமைச்சர் சரத் அமுனுகம உறுதியளித்தார்.

ஒன்றிணைந்த தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கத்தினரை நேற்றுமுன்தினம் கொழும்பில் சந்தித்தபோதே நிதியமைச்சர் இவ்வாறு வாக்குறுதி அளித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்-

தெரிவு செய்யப்பட்ட 17 ஆயிரம் பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் அடுத்த மாதம் 02ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தெரிந்தெடுக்கப்பட்ட அனைத்து பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

தொழில் வழங்குவது என்பது பயிற்சிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படமாட்டாது. இதன் உண்மைத் தன்மையை எதிர்க்கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார்.

**சுகாதார ஊழியர்களுக்கான**

## அதிகரித்த சம்பளப் பணத்தை மாகாணசபை வழங்க வேண்டும்

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு**

வைத்திய சேவைக்கு நிகராக - சுகாதார சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, இந்த சம்பளத்தை மாகாண சபைகளே வழங்க வேண்டும் என சுகாதார சேவை பணிப்பாளர் அத்துல ஜயந்த தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த இணக்கப்பாடு ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மாகாண ஆளுநர் திறைசேரி அதிகாரிகள் மாகாண சபைகளில் சுகாதார அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மூளாய் வைத்தியசாலையில்**

## புனரமைக்கப்பட்ட விடுதியை யு.எஸ்.எயிட் கையளிப்பு!

யு.எஸ்.எயிட் நிறுவனத்தினால் மூளாய் வைத்தியசாலை வளாகத்தில் புனரமைக்கப்பட்ட வைத்திய விடுதியை, அமெரிக்க தூதரகப் பொறுப்பதிகாரி ஜேம்ஸ் என்ட்வில்ஸ் சம்பிரதாயபூர்வமாக வைத்தியசாலை நிர்வாகத்திடம் நேற்று கையளித்தார்.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - நோர்வே தூதரகத்தின் மக்கள் தொடர்பால் அதிகாரி பிலிப் பிறைனும் கலந்து கொண்டார்.

இதேசமயம், மூளாய் மருத்துவமனைப் பிரசவ விடுதிக்கான நவீன மருத்துவ உபகரணத் தொகுதி ஒன்றை நோர்வே தூதரக செயலாளர் கையளித்தார்.

இதேவேளை, சண்டிலிப்பாயில் அமைந்துள்ள இடம் பெயர்ந்தோர் முகாம் மக்களை நோர்வே தூதரக செயலாளர் சந்தித்து உரையாடினார்.

அத்துடன் சாவகச்சேரிக்கு விஜயம் செய்த அவர் சாவகச்சேரிப்பகுதியில் உள்ள கடந்த காலயுத்தத்தினால் கணவனை இழந்த 20 விதவைகளுக்கு தையல் இயந்திரங்களையும் கையளித்தார்.

நேர்காணல்

கண்ணன்

# நாட்டுக் கூத்துக் கலையை அழியாமல் பாதுகாக்க வேண்டியது அவசியமானதாகும்



நெடுந்தீவில் அண்ணாவியார் சைமன் யேசுதாசன் அவர்களை சந்தித்து கூத்துக கலை தொடர்பான பல விடயங்களை அறிந்துகொண்டோம். அதன் விபரங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

நாட்டுக்கூத்து துறையில் ஈடுபட்டு சிறப்பாக முன்னேறிவரும் நீங்கள் உங்களது வாழ்க்கை தொடர்பில் முதலில் கூறுங்கள்.

1937ஆம் ஆண்டு நெடுந்தீவில் பிறந்து நெடுந்தீவு 8ஆம் வட்டாரத்தில் வசித்துவரும் நான். எனது பாடசாலை நாட்களில், அங்கு இடம்பெறும் கலைநிகழ்வுகளில் பங்கெடுத்து அதன் மூலம் கலையில் பெரும் ஆர்வம் கொண்டு, கூத்துக் கலையில் புகவேண்டுமென்ற ஆசையும், எனது முயற்சியும் தான் இன்று என்னை நாட்டுக்கூத்துக் கலை அண்ணாவியாராக மாற்றியமைத்துள்ளது.

இவ்வாறு நாட்டுக் கூத்துக் கலையில் புகுந்த உங்களது கலை நகர்வின் பரிமானம் தொடர்பாக கூறுங்கள்.

எனது 23ஆவது வயதில் 1960 ஆம் ஆண்டில் 'மரியகிருதா' என்ற கூத்தில் செவிலித்தாய் என்ற பாத்திரம் ஏற்று சிறப்பாக, முதன் முதலில் நடித்தேன். இந்தக் கூத்துக் கலையில் என்னை அறிமுகப்படுத்தியவர் இந்தக் கூத்துக் கலையின் அண்ணாவியாரான என்.ராசேந்திரம் என்பவராவார். 'மரியகிருதா' என்ற கூத்து மேடையேறிய பின்னர் கூத்தின் மேல் இன்றும் ஆர்வம் கொண்டு 1965ஆம் ஆண்டிலே 'ஞானசவுந்தரி' கூத்தில் தர்மராசா பாத்திரமேற்று சிறப்பாக எனது பங்கை ஆற்றியதுடன், நான் பாத்திரமேற்று நடித்த கூத்துக்களை, நானே பழக்கி மேடையேற்றவேண்டும் என்ற அவாவினால் தூண்டப்பட்டு அதனையே செய்து சுமார் மூன்று, நான்கு தடவைகள் மேடையேற்றி மக்களின் மனதிலே பெரும் இடத்தைப்பெற்றுக் கொண்டேன்.

அதன் பின்பு சில ஆண்டுகள் எனது குடும்பச் சுமை காரணமாக கூத்துக்கலை ஈடுபாட்டில் இடைவெளி ஒன்று ஏற்பட்டது. அதன் பின்னர் 1972ஆம் ஆண்டில் எனது முழு முயற்சியால் 'புனித யுவானியார்' என்ற கூத்தினை மேடையேற்றி, மக்கள் வரவேற்பைப்பெற்று மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தக் கூத்தினை 1975 கரலப்பகுதியில் மேடையேற்றினேன்.

நாட்டில் நிலவிய அசாதாராண சூழல் காரணமாக தொடர்ந்து கலை வளர்ச்சி பாதிகப்பட்டதுடன் நானும் 1990ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்து இந்தியாவுக்கு சென்று 1992 இல் மீளக் குடியமர்ந்துவிட்டேன். மீளக் குடியமர்ந்து 92 ஆம் ஆண்டிலேயே 'புனித யுவானியார்' கூத்தினை ஒருங்கிணைத்து மேடையேற்றினேன்.

1993ஆம் ஆண்டிலே இளம் தளிர் நாடகமன்றத்தினரத வேண்டுகோளுக்கிணங்க அந்தமன்ற இங்கத்தவர்களுக்கு நானும், அமரராகிவிட்ட என் அடைக்கலமுத்து என்பவரும் சேர்ந்து 'பூதத்தம்பி' என்ற கூத்தினை பழகி மேடையேற்றியதுடன், இந்தக் கூத்து 1994, 1997 ஆகிய வருடங்களிலும் மக்களது வேண்டுகோளுக்கமைய மேடையேற்றப்பட்டது.

இதேவேளை 'மரியதாஸ்' என்ற கூற்றினை ஒருங்கிணைத்து பழக்கி மேடையேற்றப்படாமல் கைவிடப்பட்டுள்ளது.

இந்த மாதம் (ஆவணி) 29 ஆம் திகதி புனித யுவானியாரின் சிரந்தறிந்த திருநாள் இடம்பெறும்போது, அன்றையதினம், இதனை நினைவுபடுத்தும், இந்த வரலாற்றுச் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த 'ஏரோதியாளின் சபதம்' என்ற மூத்தினை மேடையேற்றவுள்ளேன்.

உங்களது கூத்துக்களில் நடித்து இன்று இக்கலையில் முன்னேறியவர்கள் எனக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள்

எனது பல கூத்துக்களில் முக்கிய பல பாத்திரங்களில் நடித்து, திறைமையாகச் செய்யப்பட்டு இன்றும் வளர்ந்து வரும் அண்ணாவியார் எஸ். அமிர்தநாதர் இதற்கு ஒரு உதாரணம். இவர் தனது முயற்சியால் திறம்பட பல கூத்துக்களை மேடையேற்றியுள்ளார் எனவும் இங்கு குறிப்பிட்டுக் கூறலாம்.

கூத்துக்கலை வளர்ச்சியில் எதிர்



கொள்ளும் பிரச்சினைகளுக்கு தங்களது எதிர்பார்ப்புக்களும் தொடர்பாகக் கூறுங்கள்

பலவன் விட்டிலே கஞ்சிகுடிக்க வழியில்லை' என்பது போல எமது கலை முன்னேற்றத்துக்கு நிதிவசதியே பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது. நிதிவசதியினை யாரும் ஏற்படுத்தித் தந்தால் எமது பாரம்பரியக் கலைகளை அழியாமல் பாது காக்கலாம். 'குரல் இருக்கும் இடத்திலே பணமில்லை, பணம் உள்ள இடத்திலே குரல் இல்லை' என்ற நிலை தான் இருந்து வருகின்றது. நடிகர்கள் ஒவ்வொருவரும் ஒரு தொகை பணம் செலுத்தி கூத்தினை மேடை யேற்றக் கூடியதற்கும் வசதியில்லை. அரசாங்கம் ஏதாவது இதற்கு ஒத்துளைப்பு உதவி வழங்கினால் வருடத்தில் 2 அல்லது 3 கூத்துக்கள் மேடையேற்றலாம். இதேவேளை எமது தீவுக்கென கலாச்சார உத்தியோகத்தில் ஒருவர் இல்லை இதுவும் எமக்கொரு பின்னடைவுதான்.

கூத்துக்கலை தொடர்பாக தங்களுக்கு ஏதாவது பாராட்டுக்கள், பட்டங்கள் கிடைத்துள்ளதா?

ஆம். நெடுந்தீவு கலாச்சார சபையினரால் நடத்தப்பட்டு முத்தகலைஞர் கௌரவிப்பு விழாவிலே நாட்டுக் கூத்தின் மேன்மை கருதி 16.07.2000 அன்று 'கலைஞான மேதை' என்னும் பட்டமும், வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் இந்து சமய கலராச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் - யாழ். நல்லூர் துர்காமணிமண்டபத்தில் வைத்து 18.11.2001 ஆம் ஆண்டு நாட்டுக்கூத்துக்கென 'கலைஞான கேசரி' என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

எதிர்வரும் 29ஆம் திகதி மேடையேற்றவுள்ள 'ஏதாரியாரின் சபதம்' என்ற கூத்தினை மேடையேற்ற வென வெளிநாடுகளில் வசிக்கும் நெடுந்தீவைச் சேர்ந்த ஆர்வலர்கள் சிலரும், தீவிலுள்ள ஆர்வளர்கள் சிலருமே நிதியுதவிகள் வழங்கி ஒத்துழைப்புத் தந்துள்ளமையினையும் நான் இந்த வேளையில் கூறி வைக்க விரும்புகிறேன்.

□□□

கல்வி

ஆர்.கே.மேனன்

# தமிழ்ப் பிரதேசங்களில் வெற்றியைக் காணாத புதிய கல்விச் சீர்த்திருத்த நடைமுறைகள்

அன்று தொட்டு இன்றுவரை ஏனைய நாடுகளின் கல்விக் கண்ணோட்டத்தோடு ஒப்பிடுகின்றபோது எமது நாட்டில் எழுத்தறிவு உச்ச நிலையில் இருந்தது மாத்திரமன்றி எமது நாட்டு பட்டச்சான்றுகளுக்கும் ஓர் உயரிய மதிப்பு உலகக் கல்வியியல் சமூகத்திலிருந்து வந்தது. இதற்கு அடிப்படைக் காரணம் எமது கல்வியை யாரும் விலைகொடுத்துப் பெறமுடியாமல் இருந்தமையே.

இப்படிப்பட்ட எமது தமிழ் மக்க ளின் கல்வியியல் நீரோட்டம் 1996ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலங்களில் சற்று வீழ்ச்சிகண்டது. இதற்குப் பல காரணங்கள். இந்தக் காரணங்களைத் தேடியறிய முற்பட்ட எமது கல் வியமைச்சு தனது கட்டுக்கோப்புக் குள் ஒரு குழுவை உருவாக்கி அந் தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகப் போலி ஆதாரங்களைக் காட்டிச் சில இனவாத அடிப்படைகளிலேயே இணைத்து 1997ஆம் ஆண்டுகளில் புதிய கல்விச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து, அன்னிய வளர்முக நாடுகளுக்குச் சொந்தமான இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தம் இன்று போதிய வளங்களற்ற முறையில் பிரயோகிக்கப்பட்டதால் மாணவர்களது பெறுபேறுகளையே பாதிக்கும் அளவுக்குத் தமிழர் எதிர்காலங்களையே முட்டுக்கட்டையாக்கிக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் புதிய கல்விச் சீர்திருத்தம் தோன்றுவதற்கு அடிப்படையாக இருந்த தமிழர் கல்வி நிலை வீழ்ச்சியடைந்தமைக்கான அடிப்படைக் காரணங்களையும், புதிய கல்விச் சீர்திருத்தம் என்ற பேரில் சிங்களப் பேரினவாதம் தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கல்வியல் வன்முறைகள் பற்றியும் சற்று விரிவாக இந்தக் கட்டுரையில் ஆராய்வோம்.

### போர்க்காலச் சூழல்

இற்றைக்கு 20 ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதப் போக்கின் ஓர் அடக்குமுறைப்போர் இடம்பெற்று வருகின்றது. இதில் பல வழிகளில் தமிழர்களைப் பலவீனப்படுத்த வேண்டுமென்று இலங்கை அரசாங்கம் செய்த பல்வேறு சதிகளில் ஒன்றுதான் இந்தக் கல்வியில் கைபோட்ட கதை. இந்த அடிப்படையில்தான் தமிழர்களின் கல்விக் கண்ணாய் விளங்கிய யாழ். நூல்நிலையம் எரிக்கப்பட்டது. எத்தனையோ தமிழ்ப் பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டன. வெட்டுப் புள்ளியில் தமிழ் மாணவர்களை விரட்டுகின்ற சம்பவங்கள் இடம்பெற்றன; வடக்கு - கிழக்கு ஆசிரியர் பற்றாக்குறைச் சந்தர்ப்பத்தை மேலெழச் செய்தது. பெரும்பான்மை சிங்களம் என்ற போக்கில் பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் என்ற தமிழ் மக்களுக்குச் சொந்தமான கல்விக்கழகங்களை சூரையாடி சிங்கள பிரதேச முதலீடுகள் பெரும்தொகையிலும் உருவாக்கப்பட்டன. பல்கலைக் கழக - குறிப்பாக மருத்துவபீட இறுதிப் பரீட்சை கால நீடிப்பை (போரைச் சாட்டி) அதிகரித்தது. இப்படியே சொல்லிக்கொண்டு போகலாம். தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் கட்டவிழ்த்து விடப்பட்ட கல்வியல் அடக்குமுறை அன்றைய தமிழ் மாணவர்களின் கல்வியல் வீழ்ச்சிக்கு இது ஒரு முக்கியமான காரணமாக இருந்தது. ஆனால், புதிய கல்வி சீர்திருத்தக் குழு இதை ஒரு பொருட்டாகத் தன்னும் எடுக்கவில்லை.

துறைசார்ந்த கல்வி விருத்தியின்றி பொதுப் பரீட்சையை மையமாகக் கொண்ட கல்விப்போக்கு இன்னுமொரு காரணமாக விளங்குகின்றது.

இன்று ஜப்பான் உலக உற்பத்தியில் முன்னணியில் திகழ்வதற்கு அடிப்படை என்ன தெரியுமா? 8ஆம் ஆண்டுக்கு பின் அவர்களுக்குகந்த துறைகளில் அவரவரை வளர்க்கின்ற ஒரு கல்வி முறைமை இருந்தது. இதனால்தான் உலகின் வரலாற்றில் எந்த விதமான வளங்களுமற்ற ஜப்பான் நாடு இரண்டாம் உலக யுத்தத்தில் அணுகுண்டு வீசப்பட்டும் கூட இன்று தலை நிர்மிந்து நிற்கினறது.

ஆனால், எமது நாட்டில் க.பொ.த. சாதாரணதரம், உயர்தரம் என்ற பொதுப் பரீட்சைகளை எல்லோரும் தாண்ட வேண்டும். பல்கலைக்கழகம் சென்றால் தான் வேலைவாய்ப்பு என்கின்ற கல்வியல் எண்ணக் கரு புரையோடிக் கிடக்கின்றது. இதைக் குறைபாட்டின் அடிப்படையாகக் கொண்டு நிவர்த்தி செய்கின்றோம். என்ற போலி நடைமுறைகள் போக்கில் புதிய கல்வி சீர்திருத்தத்தில் தொழில்நுட்பங்கள், தகவல் தொழில்நுட்பம் என்று சிலவற்றைப் புகுத்திவிட்டு முன்பிருந்த பொதுப் பரீட்சை என்கின்ற பாதையின் ஊடாகத்தான் மாணவர்கள் வெளியேற்றப்படுகின்றனர். தகவல் தொழில்நுட்பம், தொழில் முன்னிலைப் பாடங்களுக்கான உயர் கல்வி நிறுவனங்களோ அல்லது அதற்கூடான வேலைவாய்ப்புக்கள் வழங்கப் படுகின்றனவா?... என்றால் அது கேள்விகுரிய ஒன்றாகத்தான் இருக்கின்றது. எல்லோருக்கும் ஒரு துறைசார்ந்த திறன் விருத்தி காணப்படமாட்டாது. அது ஆளுக்காள் வேறுபடும். அவர்களுக்கு சார்ந்த துறைகளுக்கு ஊடாகவே அவரவர் வளர்க்கப்பட வேண்டும். வளர்ப்பதற்கு ஒரு உயர் தொழில் வாய்ப்பு வசதிகள் செய்யவேண்டும். அப்படி எதுவும் செய்யாது புதிய கல்வி சீர்திருத்தத்தின் ஊடாக எமது தமிழ் மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்தப் போகின்றோம் என்ற போலி நாடகப் போர்வை போட்டு 'யி.ரி.செற்' நிதியினையும் இலங்கை அரசாங்கம் போருக்காகச் சேர்க்கின்றது.

### கிளிப்பிள்ளைப் பாடம் கற்பிற்கும் நிலை மாற்றம்

பொதுப் பரீட்சைகளை மையமாகக் கொண்டு ஆசிரியர் போதிப்பதை அப்படியே எழுதிப் பரீட்சையிலே வெற்றி கண்டு பல்கலைக் கழகம் சென்று வெளியேறுபவர்கள் சாதாரணமாக ஒரு மேடையில் ஏறி பேசமுடியாத அளவிலான பலவீனப்பட்ட ஆளுமைகளோடு வளர்க்கப் படுகின்றார்கள். சுயசிந்தனையற்று, சுயதிறன் விருத்தியற்று வளர்க்கப் படுகின்றார்கள். என்ற சில அடிப்படைக் குறைபாட்டு காரணங்களைச் சுட்டிக் காட்டி புதிய கல்விச் சீர்திருத்தத்தில் ஆசிரியர் மையக் கல்வியிலிருந்து மாணவர் மையக் கல்வியாக மாற்றப்படவேண்டும்.

குழுவேலைகள், குழுச் செயற்பாடுகள் மூலம் மாணவர்கள் சுயமாக இயங்கவேண்டும். கற்றல் முறை மாணவர்களுக்கு புகுத்தப்பட வேண்டும். கற்பித்தல் சாதனங்கள் தொடர்பு சாதனங்கள் ( ரிவி, ரேடியோ, கனினி, இணையம்) மூலம் கற்பிக்கப்பட வேண்டும். அலகுகளுக்கூடான திறன் விருத்தி இடையிடையே பரிசோதிக்கப்பட வேண்டும். ஆசிரியர் வழிகாட்டியாக மாத்திரமே தொழிற்படவேண்டும். ஒவ்வொரு மாணவனும், அறிவு, திறன், மனப்பாங்கு என்ற ரீதியில் வளர்ச்சியடைய வேண்டும்.

விளையாட்டுச் செயற்பாடுகள் வழிநடத்தப் படவேண்டும் என்றெல்லாம் புதிய கல்வி சீர்திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது. அதற்கான மேற்பார்வைகளும் முறையான முறையில் வழங்கப்பட்டது. ஆனால், அப்படியிருந்தும் தமிழ் மாணவர்களின் பெறுபேறுகள் ஏன் வீழ்ச்சி கண்டது.

திரைப்படங்கள் நாகரிக வளர்ச்சி கல்வி நிலையைப் பாதித்தது என்று கூறினால் கஷ்டப் பிரதேசங்களில் திரை கலையரங்குகள் எங்கே...? நாகரிக போக்குகள் எங்கே...? அப்படியானால் ஏனிந்த கஷ்டப் பிரதேசங்களில் வீழ்ச்சி கண்டது. உண்மையை ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் ஒன்று புரியும். கொழும்பை அண்டிய சிங்களப் பிரதேசங்களில் இது வெற்றியளிக் கின்றது.

ஆனால், தமிழ் பிரதேசங் களில் வெற்றியளிக்க வில்லை என் றால் அதற்குக் காரணமென்ன புதிய கல்வி சீர்திருத்தம் சரியானவை அதன்போக்குகள் சரியானவை புதிய கல்வி சீர்திருத்தத்தின் அடிப்படையில் இருக்க வேண்டிய பௌதிக ஆளணி வளங்கள் இந்தத் தமிழ் பிரதேசங்களில் இருக்கின்றனவா என்றால் அது இல்லை. இதுதான் இந்தத் தோல்விக்கான முக்கிய காரணம். சிங்களப் பிரதேசங்களில் புகுத்தப்பட்ட புதிய கல்வி சீர்திருத்தத்தின் அடிப்படையில் போதிய வளங்ககள் புகுத்தப் படுகின்றன. (ஆசிரிய வளங்கள் உட்பட) ஆனால், தமிழ் பிரதேசங்களில் குறிப்பாக கஷ்டப் பிரதேசங்களில் இந்த வளங்களற்ற நிலையில் புதிய கல்விச சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இதனால் ஆசிரியரின் வேலைப் பழுக்கள் அதிகரிக்கின்றனவே தவிர மாணவர்களின் பெறுபேற்று வெளியேற்றத்துக் கூடாக அதிகரிக்கவில்லை.

12 வருடங்கள் பாடசாலையில் படித்துவிட்டு பகலிரவாய் திரிகின்றான். வாழவழி ஏதுமின்றி இதுஏன்? இன்னும் வடக்குக் கிழக்கில் எத்தனை ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அத்தனையும் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் நிரப்பப்பட்டனவா? எத்தனை பாடசாலைகளில் கணினி உண்டு எத்தனை பாடசாலைகளில் கற்பித்தல் கருவி உண்டு. எத்தனை பாடசாலைகளில் கற்பித்தல் சாதனமுண்டு. இப்படியான சிங்களப் பேரினவாதத்தின் ஏமாறறும் செயற்பாடுகளால் தான் தமிழ் பிரதேசங்களில் புதிய கல்விச் சீர்திருத்தம் வீழ்ச்சிகண்டிருக்கின்றது. வீழ்சி கண்டது மட்டுமன்றி ஏற்கனவே இருந்த கல்வித் திட்டத்தால் பெறப்பட்ட பெறுபேறுகளை விட தற்போது வந்த புதிய கல்விச் சீர்திருத்தத்தில் வீழ்ச்சி கண்டத்ற்கு இதுவே பிரதான காரணமாகும்.

அன்றுதொட்டு இன்று வரையும் இலங்கை அரசாங்கம் குறிப்பாக சந்திரிக்கா அரசாங்கம் சர்வதேசத்திற்கு நடித்துக் காட்டி தமிழ் மக்களுக்கு மறைமுகமாக செய்த சதிகளில் ஒன்றுதான் இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தம். □□□□

# அடுத்தடுத்து இரண்டு விமானங்கள் ரஷ்யாவில் விழுந்து நொருங்கின!

## பயணிகள், பணியாளர்கள் உட்பட 89 பேர் பலி




ரஷ்யாவில் இரண்டு விமானங்கள் விழுந்து நொருங்கியதில் 89 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம் பெற்றது. ரஷ்ய தலைநகர் மொஸ்கோவிலுள்ள டோமோடிவோ விமான நிலையத்திலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு முதலாவது விமானம் வோல்கோ கிரேட் நகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இந்த விமானம் துலா பகுதியிலுள்ள புச்சால்கி நகருக்கு மேல் பறந்து கொண்டிருந்தவேளை திடீரென விமானம் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானது. இவ்வாறு விழுந்து நொருங்கிய விமானத்தின் பாகங்கள் பல இடங்களில் சிதறிய நிலையில் எரிந்துகொண்டிருந்தன.

இந்த விமானத்திலிருந்த பயணிகள், பணியாளர்கள் உட்பட 52 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவித்தன. ஆனாலும், விழுந்த இந்த விமானத்தில் 62 பயணிகள் இருந்ததாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

இந்த விபத்துக்குள்ளான விமானம் குப்போலிவ் டி.யு - 154 வகையைச் சேர்ந்தது. இந்த வகை விமானங்கள் பெரும்பாலும் விபத்துக்களில் சிக்குவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தின் இயந்திரப் பகுதியில் ஏற்பட்ட பழுது அல்லது மோசமான வானிலை அல்லது பயங்கரவாதிகளின் நாசவேலை காரணமாக இந்த விபத்து நடந்ததா என்பது குறித்து ரஷ்ய அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விமானம் விழுந்து நொருங்குவதற்கு முதல் பாரிய வெடிச்சத்தம் ஒன்று கேட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த விமானம் விபத்துக்குள்ளான சில நிமிடங்களில் பிறிதொரு விமானம் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மொஸ்கோவிலிருந்து கருங்கடல் பகுதியிலுள்ள சோசி சுற்றுலா மையத்துக்குச் சென்ற ரோஸ்டோவ் ரக விமானமே விபத்துக்குள்ளாகியது.

தமது விமானம் கடத்தப்பட்டிருப்பதாக விமான ஓட்டிகள் கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இந்த விமானம் கருங்கடல் பகுதியில் விழுந்து நொருங்கியுள்ளதாகவும், அதிலிருந்த 37 பயணிகளும் உயிரிழந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு விமானங்களையும் பயங்கரவாதிகள் கடத்தி ரஷ்ய அரசாங்க கட்டடங்கள் மீது மோதி தாக்குதல் நடத்த முயற்சித்திருக்கலாமெனவும், இதனை விமானத்திலிருந்த பயணிகளும், விமானப் பணியாளர்களும் தடுக்க முயற்சித்தவேளை - பயங்கரவாதிகள் தம்மிடமிருந்த குண்டுகளை வெடிக்க வைத்திருக்கலாமெனவும் சில தகவல்கள் தெரிவித்தன.

ஆனாலும், ரஷ்ய புலனாய்வு அமைப்பின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இந்த இரு விமான விபத்துக்கும் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பில்லையெனத் தெரிவித்துள்ளது. இந்தத் தகவலை மறுத்த ரஷ்ய விமானப் பாதுகாப்பு நிபுணர்கள் இது ஒரு பயங்கரவாத செயற்பாடே எனத் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி விமானங்களைக் கடத்திய அல் கொய்டா அமைப்பினர் அமெரிக்க அரசின் கட்டடங்களைத் தகர்த்தது போல, ரஷ்யாவிலும் தற்போது இரண்டு பயணிகள் விமானம் அடுத்தடுத்து சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது அங்கு பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

## உலக நோக்கு

# பலஸ்தீன புலனாய்வு அதிகாரி துப்பாக்கி பிரயோகத்தில் காயம்

ஆயுதம் தாங்கிய குழுவினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் - காஸாவின் புலனாய்வுத்துறை அதிகாரி மார்பில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்தவர் புலனாய்வுத்துறை அதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் தாரிக் அபு றஜாப் என தகவல்கள் தெரிவித்தன.

மெய்ப்பாதுகாவலர்களுடன் காரில் பயணம் செய்துகொண்டிருந்த வேளையே தாரிக் அபு றஜாப் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் அபு றஜாப் காயமடைந்ததுடன் அவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் மூவரும் படுகாயமடைந்தனர்.

இவரது தொடரணி மீதான தாக்குதல் - காஸாவின் மேற்குப் பகுதியிலுள்ள சற்றி அகதி முகாமுக்கருகில் தனது தலைமையகத்தை நோக்கி அபு றஜாப் சென்றுகொண்டிருக்கையில் இடம்பெற்றது.

அபு றஜாப் நல்ல நிலையில் இருப்பதாகவும், கவலைப்படக்கூடிய நிலையில் இல்லையெனவும் பலஸ்தீன வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

ஆனாலும், காயமடைந்த மூவரில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இத்தாக்குதலில் கொல்லப்பட்ட மெய்ப்பாதுகாவலர் ஹமீஸ் அப்துல் ஜவாட் என அடையாளம் காணப்பட்டார்.

கடந்த ஜுலை மாதம் பலஸ்தீனத்தில் வெளிநாட்டவர்கள் கடத்தப்பட்ட சம்பவத்துக்கு பொறுப்பேற்று அப்போதைய புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் விலகியதையடுத்து அபு றஜாப் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிகிச்சைக்கு பிரிட்டன் சென்ற

# ஈராக்கின் ஷியா மதத்தலைவர் நேற்று நாடு திரும்பியுள்ளார்!

கடந்த மூன்று வாரமாக லண்டனில் சிகிச்சை மேற்கொண்டு வந்த ஈராக்கின் ஷியா பிரிவு மதத் தலைவரான ஆயதுல்லா அலி அல் சிஸ்ராணி நேற்று ஈராக் திரும்பினார்.

ஈராக்கின் நஜாவ் நகரில் இடம் பெற்றுவரும் வன்செயல்களை முடிவுக்கு கொண்டுவரும் நபர் அல் சிஸ்ராணியே எனப் பலரால் எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டனிலிருந்து விமான மூலம் குவைத் வந்து அங்கிருந்து தரை வழியாக ஈராக் சென்றடைந்தார். நேற்று வந்த இவர் நஜாவ்விலுள்ள ஷியாக்களின் புனித தலத்துக்கு விஜயத்தை மேற்கொள்ளவிருந்தார்.

நஜாவ் நகரத்தைப் பாதுகாக்க தயாராக இருக்குமாறு அல் சிஸ்ராணி தனது ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக அவரது பேச்சாளர் தெரிவித்தார்.

ஈராக்கில் இடம்பெறும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த நாடு திரும்பியுள்ள அல் சிஸ்ராணி முக்கிய பங்கை வகிப்பாரென பாக்தாத்திலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் மத்தியூ பிறைஸ் தெரிவித்தார்.

தற்போது நஜாவ் நகரில் இடம் பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களைப் போல - கடந்த வருடமும் சதார் ஆதரவுப் படையினருக்குக்கும், அமெரிக்க துருப்பினருக்கும் இடம்பெற்றதாகவும் -

இதனையடுத்து அவ்வேளை இரு பகுதியினருக்கும் இடையில் யுத்த நிறுத்தமென்றை மதத் தலைவர் அல் சிஸ்ராணி செய்துவைத்ததாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, நஜாவ் நகரிலுள்ள இமாம் அலி பள்ளிவாசலில் தங்கியுள்ள சதார் அதரவுப் படையினர், சதாரின் கட்டளையில்லாமல் அங்கிருந்து வெளியேறமாட்டார்கள் என பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கான தயாரிப்பு வேலைகளில் சதார் தற்போது ஈடுபட்டுள்ளதாக அவரது பேச்சாளர் அலி சிமேசிம் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு, தற்போது இடம் பெற்றுவரும் மோதல்களுக்கு முடிவு கட்ட விரும்புகின்றோம் என அவர் தெரிவித்தார்.



கடந்த பல நாட்களாக சதார் பொது இடங்களில் தோன்றுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் அவர் தமது சகல நடவடிக்கைகளையும் நஜாவ்வில் இருந்தபடியே அவதானித்து வருவதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி - அமெரிக்கப் படையினர் இமாம் அலி பள்ளிவாசலுக்கு மிக நெருக்கமாக முன்னேறியுள்ளதாகவும், பள்ளிவாசலின் பிரதான வாசற் பகுதியிலிருந்து 20 மீற்றர் தூரத்திற்கு சென்றுள்ளதாகவும் ஏ.எப்.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

## ஆப்கான் ஜனாதிபதி பாகிஸ்தான் விஜயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் இரண்டு நாள் சுற்றுப்பயணமாக பாகிஸ்தான் சென்றார். அவருக்கு பாதுகாப்பு பலமாக இருந்தது. அவரது இரு பக்கமும் அமெரிக்க இராணுவ வீரர்கள் எப்போதும் இருந்தனர்.

அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் கர்சாய் உரையாற்றுவதாக இருந்தது. பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் உரையாற்றுவதை இரத்துச் செய்தார்.

ஆப்கானிஸ்தான் புனரமைப்புப் பணியில் பாகிஸ்தான் தொடர்ந்து உதவும் என்று முஷாரப், கர்சாயிடம் உறுதியளித்தார்.

## ஜோர்ஜ் புஷ் – ஜோன் ஹெரி குத்துச்சண்டைப் போட்டி!



செல்போன்களில் வீடியோ கேம்ஸ் உள்ள போன்களும் வந்திருக்கின்றன. அமெரிக்காவில் உள்ள ஒரு செலூலர் போன் வீடியோ கேம்ஸ் நிறுவனம் புதிய வீடியோ கேம்ஸை அறிமுகப் படுத்தியிருக்கிறது. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும் - ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோன் ஹெரியும் மோதுகிறார்கள்.

இவர்கள் இருவரும் குத்துச்சண்டை போடுவது போல வீடியோ கேம்ஸ் இந்த செலூலர் போனில் உள்ளது. வாக்குப் போட்டு மக்கள் யார் அதிபர் என்று தீர்மானிக்கிறார்கள். இந்த வீடியோ கேம்ஸ் ஆடுபவரைப் பொறுத்தே இந்த செலூலர் போனில் வெற்றி தோல்வி அமையும்.

## நமது ஈழநாடு

## இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரலாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால், ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

நிபந்தனைகள்

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

குறிப்பு:- இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

| | |
|---|---|
| நமது ஈழநாடு - | நமது ஈழநாடு பணிமனை |
| 267, நாவலர் வீதி, | யாழ் சாலை, |
| யாழ்ப்பாணம். | கிளிநொச்சி. |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மறைமுகமான யுத்தத்தைத் தூண்டுவோர் கடும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

மறைமுகமாக யுத்தத்தைத் தூண்டும் நடவடிக்கையில் எவரும் ஈடுபடவேண்டாம். இந்த முயற்சியில் ஈடுபடுவோர் கடும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு றங்கல கடற்படைத் தளத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில் -

யுத்த நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் மறைமுகமாக ஈடுபடுவது நிறுத்தப்படல்வேண்டும். இந்த முயற்சியில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் இது குறித்து கடும் பின்விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் நடைபெற்ற கொலைகள் மற்றும் யுத்தநிறுத்த மீறல்கள் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விரைவில் அறிக்கையொன்றை வெளியிட வேண்டும்.

கடந்த சில நாட்களாக இலங்கையில் இடம்பெற்றுவரும் கொலைகள், சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஓர் அதிருப்தியை உருவாக்கியுள்ளது.

நிலையான சமாதானத்தினை உருவாக்கவேண்டும் என்பதில் அரசாங்கம உறுதியாக உள்ளது. இந்த நடைமுறையுடன் தொடர்புடைய அனைவரும் பொறுப்பற்ற செயல்களிலிருந்து விலகி ஜனநாயக நடைமுறைக்கு வரவேண்டும் என நான் சகல தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 25 | 28 | 20 | 73 |
| சீனா | 24 | 16 | 12 | 52 |
| ஜப்பான் | 15 | 8 | 9 | 32 |
| அவுஸ்ரேலியா | 15 | 10 | 14 | 37 |
| ருஷ்யா | 05 | 19 | 21 | 50 |
| பிரான்ஸ் | 10 | 07 | 09 | 26 |
| ஜேர்மனி | 09 | 11 | 13 | 33 |
| இத்தாலி | 08 | 06 | 08 | 22 |
| ருமேனியா | 08 | 04 | 04 | 16 |
| உக்ரெய்ன் | 08 | 03 | 06 | 17 |
| பிரிட்டன் | 07 | 08 | 09 | 24 |
| தென்கொரியா | 06 | 10 | 05 | 21 |
| கிறிஸ் | 05 | 03 | 03 | 11 |
| நெதர்லாந்து | 04 | 07 | 08 | 19 |
| ஹங்கேரி | 04 | 06 | 01 | 11 |
| சுவீடன் | 03 | 00 | 02 | 05 |
| துருக்கி | 03 | 00 | 01 | 04 |
| கனடா | 02 | 04 | 01 | 07 |
| பெலாரஸ்ட் | 02 | 03 | 06 | 11 |
| போலந்து | 02 | 02 | 04 | 08 |
| ஸ்லோவாக்கியா | 02 | 02 | 01 | 05 |
| பல்கேரியா | 02 | 01 | 05 | 08 |
| எதியோப்பியா | 02 | 01 | 01 | 04 |
| ஜோர்ஜியா | 02 | 01 | 00 | 03 |
| தாய்லாந்து | 02 | 00 | 02 | 04 |
| சிலி | 02 | 00 | 01 | 03 |
| நோர்வே | 02 | 00 | 00 | 02 |
| நியூஸிலாந்து | 02 | 00 | 00 | 02 |
| ஸ்பெயின் | 01 | 07 | 04 | 12 |
| ஒஸ்ரியா | 01 | 04 | 01 | 06 |
| கென்யா | 01 | 04 | 01 | 06 |
| செக் குடியரசு | 01 | 03 | 03 | 07 |
| கியூபா | 01 | 01 | 06 | 08 |
| பிறேசில் | 01 | 01 | 02 | 04 |
| இந்தோனேசியா | 01 | 01 | 02 | 04 |
| தென்னாபிரிக்கா | 01 | 01 | 02 | 04 |
| சுவிஸ்லண்ட் | 01 | 01 | 01 | 03 |
| சிம்பாப்வே | 01 | 01 | 01 | 03 |
| லிதுவேனியா | 01 | 01 | 00 | 02 |
| மொறோக்கோ | 01 | 01 | 00 | 02 |
| டென்மார்க் | 01 | 00 | 05 | 06 |
| பெல்ஜியம் | 01 | 00 | 02 | 03 |
| இஸ்ரேல் | 01 | 00 | 01 | 02 |
| பஹாமஸ் | 01 | 00 | 00 | 01 |
| கமிரோன் | 01 | 00 | 00 | 01 |
| ஐக்கிய அரபு எமிரேட் | 01 | 00 | 00 | 01 |

# பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்காவிடின் நிதியுதவி வேறு நாடுகளுக்குப் போகும்!

## நோர்வே தூதரக செயலர் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும். அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை விரைவில் மீள ஆரம்பிக்காதுவிடின், இலங்கைக்கு வழங்க உறுதியளிக்கப்பட்ட நிதியை ஏனைய வறிய நாடுகள் அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என நோர்வே தூதரகத்தின் செயலாளர் கஜெஸ்ரி ரொறம்டால் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய அலுவலகத்தில் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, நோர்வே தூதரகத்தின் சிரேஷ்ட செயலாளர் கஜெஸ்ரி ரொறம்டாலுடன் நோர்வே தூதரகத்தின் இணைப்பாளர் எல்.விஜயநாதனும் மற்றும் மனித நேய அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நோர்வே தூதரகத்தின் செயலாளர் - இலங்கையிலும் பார்க்க மிகவும் வறிய நிலையில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுத் தேவைகள் இனங்காணப்பட்ட பல நாடுகள் இருக்கின்றன.

ஆனால், அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முன்னுரிமை வழங்கியே இலங்கையின் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்படுகிறது.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் தாமதம் காட்டினால் இலங்கைக்கென ஒதுக்கப்பட்ட சர்வதேச நிதியுதவிகள் ஈராக், ஆப்கானிஸ்தான், சூடான், ருவாண்டா போன்ற நாடுகளின் அபிவிருத்தி தேவைகளுக்கு பயன்படுத்தப்படும்.

வடக்கிலும் - தெற்கிலும் உள்ள பொதுமக்கள் இரண்டு தரப்பும் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(லெ)

### கண்காணிப்புக்குழுத்...

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புறூவ் ஹொவ்டே தலைமையிலான குழுவினருக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

நேற்றைய சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் -அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### கண்காணிப்புக்குழு...

விடுதலைப் புலிகளினதும் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலிருந்து மீறப்படும் சம்பவங்களை விசாரணை செய்வதற்கே நாம் இங்கு வந்துள்ளோம்.

அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் போர்நிறுத்த மீறல் சம்பவங்கள் நடைபெற்றிருப்பது கிழக்கிலங்கையில் உள்ள வெருகல் மற்றும் அம்பாறைக்கும் இடைப்பட்ட கடலோரப் பகுதிகளாகும். இவை இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் பகுதிகள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகள் ஆயுதங்களைக் கொண்டுவருவதை...

பாட்டை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

முல்லைத்தீவுச் சம்பவம் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை கருத்துக்களைத் தெளிவாக விளக்கினார். எங்களின் கடல் பிரதேசங்களுக்குள் கடற்புலிகளின் கலங்களின் நடமாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றது.

இதைவைத்துக்கொண்டு, இது ஒரு யுத்தநிறுத்தமீறல் என தவறான குற்றச்சாட்டுக்களை சுமத்துவது பொருத்தமில்லாதது.

இரண்டு தரப்பினரும் ஓர் மோதல் நிலைக்கு வந்து யுத்தநிறுத்தமீறல் நடைபெறுகின்றபோது தான் கண்காணிப்புக்குழுவந்து அதனை விசாரணை செய்து உண்மைகளை அறியலாம். அதைவிட்டு தவறான - தேவையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி கண்காணிப்புக் குழுவை இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளுவதை அவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி வலியுறுத்தினார்.

கிழக்குச் சம்பவம் தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான பதிலும் எமக்குக் கிடைக்கவில்லை. இந்தச் சந்திப்பின்போது எமது தலைமைப்பீடத்தின் கரிசனைக்கு அமைய இதுகுறித்து நேரடியாக வலியுறுத்தி யுள்ளோம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ள சரத்துக்களின்படி வடக்கு-கிழக்கில் ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் செயலிழக்கப்படவேண்டும்-அவர்கள் வெளியேற்றப்படவேண்டும். இவை இந்த யுத்தநிறுத்த உடன்பாட்டில் இரண்டு தரப்பினரும் ஏற்றுக்கொண்ட ஓர் நடைமுறை.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணா குழுவும் ஈ.பி.டி.பியினரும் படைத்தரப்புடன் இணைந்து இயங்க அனுமதித்திருப்பது இந்த யுத்தநிறுத்த சூழலை தொடர்ந்து பேணிக்கொண்டு செல்வதற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

கருணா குழுவுக்கும், ஈ.பி.டி.பிக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கம்-இந்த யுத்தநிறுத்தத்தை சீர்குலைப்பதற்கான செயற்பாடுகள் தொடர்பானது என்பதை எல்லோரும் அறிந்துள்ளனர். கருணா குழுவுடன் தப்பிச்சென்ற ஒரு சிலர் ஈ.பி.டி.பியுடன் இணைந்து கொழும்பில் செயற்பட்டுக்கொண்டிருந்தபோது அவர்களுக்குளளே முரண்பாடுகள் ஏற்பட்டு, தங்களுக்குள்ளே சண்டையிட்டு, கொலைகள், படுகாயங்கள் ஏற்பட்டதுடன் எம்மிடம் சரணடைந்தவர்களும் இருக்கின்றனர்.

இந்த விடயத்தில் புலிகளைக் குற்றம் சுமத்துவது எந்தவிதத்திலும் அர்த்தமில்லாத ஒன்றாகும். இடைக்கால நிர்வாகம் குறித்து அரசாங்கத்திடமிருந்து எந்தவித மாற்றுயோசனைகளும் முன்வைக்கப்படவில்லை. மாற்று யோசனைகள் முன்வைக்கப்பட்டால் அதனை தமிழீழ விடுதலைப புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் பல மாற்றுயோசனைகளை முன்வைத்தது. அது எந்த வகையிலும் எமது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யாதிருந்ததால், அதனை பல தடவை நாங்கள் நிராகரித்துள்ளோம்.

எமது மக்களின் அபிலாஷைகள், அவர்களின் நிலைப்பாட்டிலிருந்துதான் நாம் பேசமுடியும். அவர்களின் பிரதிநிதிகளாகத்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளனர். அந்த அடிப்படையில்தான் எமது தலைமைப்பீடம் திட்டவரைபை முன்வைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் இலங்கை அரசாங்கம் பேச்சு நடத்த வருகின்றபோதுதான் பேச்சுக்களை முன்னெடுப்பது சாத்தியமாகும்.

தமிழர் தரப்பு தமது நியாயங்களை முன் வைக்கின்றபோது - சிங்கள தேசத்தில் எழுப்பப்படும் இனவாதக் கூச்சல்கள் எப்போதும் காலங்காலமாக தொடர்ந்துகொண்டே வருகின்றது.

நாங்கள் யதார்த்தபூர்வமான திட்டவரைபை முன்வைத்திருக்கிறோம். இதனைப் புரிந்துகொண்டு பேச்சுக்கு முன்வருகின்றபோதுதான் சமாதானம் உறுதியடையும் நாம் ஒரு நிரந்தரத்தீர்வு நோக்கிச் செல்ல முடியும்.

கிழக்கில இடம்பெறுகின்ற படுகொலைகள், யுத்தநிறுத்தத்தை ஒரு அபாயத்துக்குள்ளும் பாரிய அச்சுறுத்தலுக்குள்ளும் தள்ளுகின்ற செயற்பாடாகத்தான் நாங்கள் கருதுகின்றோம்.

இன்று எமது மக்கள் சமாதான முன்னெடுப்புக்களில் முழுமையாக நம்பிக்கையிழந்துபோகும் கட்டத்துககுத் தள்ளப்பட்டுள்ளனர். இதனை அனுசரணையாளர்கள் ஊடாக தொடர்ச்சியாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வலியுறுத்தி வருகின்றோம்.

எம்மைப் பொறுத்தவரையில் தெற்கிலிருந்து பல சமாதான ஆர்வலர்கள், பத்திரிகையாளர், சமாதானத்தை விரும்புபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திப்பதோ, அவர்களின் கருத்தை அறிவதற்கோ தடை எதுவும் இல்லை.

அண்மையில் சிவில் சமூகத்தினர் எம்மைச் சந்தித்து எமது நிலைப்பாட்டை அறிந்துள்ளனர். எனவே எவர் வந்தாலும் எமது நிலைப்பாட்டைத் தெளிவாகவும், உறுதியாகவும் முன்வைக்க தயாராக இருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

### அமைச்சு கட்டடத்துக்குள்...

டக்ளஸ் தேவானந்தாவின் சார்பில் நீதிமன்றில் ஆஜரான அவரது சட்ட ஆலோசகர், டக்ளஸ் தேவானந்தா இனிமேல் மேற்படி கட்டடத்துக்குள் நுழையமாட்டார் என்று உறுதியளித்ததன் பேரில் இந்த உத்தரவை டக்ளஸ் தேவானந்தா எப்போதும் கவனத்தில் எடுக்க வேண்டும் என எச்சரித்து நீதிபதி சிசிர கே.ரட்நாயக்க வழக்கை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

இன்னுமொரு அமைச்சின் கட்டடங்களுக்குள் நுழையக்கூடாது என அமைச்சருக்கெதிராக நீதிமன்றம் தீர்ப்புவழங்கி அதற்கு அந்த அமைச்சரும் இணக்கம் தெரிவித்திருப்பது வரலாற்றில் இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

### தாக்கினால் திருப்பித்...

பிரயோகம் செய்துள்ளனர். அவர்கள் தாக்கும்போது எமது சிப்பாய்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இனிமேலும் அவர்கள் தாக்கினால் நீங்கள் தற்காப்புக்காக பதில் தாக்குதல் நடத்துங்கள் என்றுதான் படையினருக்கு அறிவுரை வழங்கியுள்ளேன்.

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் நிலைமையை விளக்கியுளளோம். விடுதலைப் புலிகளை நேரில சந்தித்து இது பற்றி கதைக்கமுடியாத நிலையுள்ளது.

இந்த நிலையில் இராணுவத்தினர் தொடர்ந்தும் தாக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. அவர்களும் பதில் தாக்குதல் நடத்தவேண்டிய நிலையே காணப்படுகிறது என்று இராணுவத்தளபதி மேலும் தெரிவித்தார்.

### ஆபத்தான கட்டத்தில்...

யுத்தத்திற்கான சூழல் ஒன்று உருவாகியுள்ளது. கொலைச் சம்பவங்கள் தொடர்பாக புலிகள் இயக்கமும், படையினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தும் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

இந்த நிலையைத் தடுத்து சமாதானப் பேச்சை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்காவிடின் நாடு இன்னுமோர் யுத்தத்தை எதிர்கொள்ளநேரிடும். தற்போது ஏற்பட்டிருக்கும் சூழல் பாரிய பிரச்சினையாக உருவெடுக்க வாய்ப்பாக அமையும். உள்விவகாரங்களைத் தீர்த்து அரசாங்கம் சரியான நிலைப்பாட்டுக்கு வந்து உண்மையான நிலை குறித்து விளக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல:- 1642 திகதி:- 24.08.2004

வெற்றி இலக்கங்கள்

B 9 1 8 8 0 8

அடுத்த சுப்பர் பரிசு 208 லட்சத்துக்குமேல்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.